Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 21 வெள்ளிக்கிழமை (06.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 323

UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-607)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## கொரோனாவால் 5 பேர் உயிரிழப்பு

### மொத்த மரணம் 29 ஆக உயர்வு

### 3 வாரத்தில் 16 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 5 கோவிட் - 19 நோயாளிகள் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 29ஆக அதிகரித்துள்ளது.

மினுவாங்கொட - பேலியகொட கொரோனா பரவல் கொத்தணியை அடுத்து கடந்த 3 வாரத்தில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

### வீதி அகலிப்பு பணியின்போது

## ரோலர் இயந்திரத்தில் சிக்குண்ட ஒருவர் உயிரிழப்பு

### வடமராட்சி முள்ளியில் சம்பவம்

(கரணவாய்)

வீதி அகலிப்பு வேலையில் ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவர் ரோலர் இயந்திரத்தில் சிக்குண்டு உயிரிழந்துள்ளதாக நெல்லியடி பொலிஸார் 19

### அபாய கட்டத்தில் இலங்கை

## வீடுகளுக்குள் தற்பொழுது கொரோனா புகுந்துள்ளது

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இந்த மாதத்தில் 9 ஆயிரம் பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருப்பதாக கூறியிருக்கும் அரச மருத்துவ அதிகாரிகள் 19

### வடமராட்சி கரவெட்டியில்

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனா உறுதி

### போதனா பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று வியாழக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

இரண்டு பெண்களுக்கும் சிறுவன் ஒருவனுக்கும் கோவிட் - 19 நோய் ஏற்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

64 வயதுடைய பெண், 39 வயதுடைய பெண் மற்றும் 14 வயது சிறுவன் ஆகியோர் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த மாதம் 19

## சுவாசிப்பதற்கு சிரமப்பட்ட மாணவி மரணம்

### சுழிபுரத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியாக மூச்சடைப்பினால் அவதிப்பட்ட மாணவி அதனை தாங்கி கொள்ள முடியாமல் விபரீத முடிவெடுத்ததில் உயிரி 19

### சாவகச்சேரியில்

## விபரீத முடிவெடுத்த முதியவர் மரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - கல்வயல் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளார்.

நஞ்சருந்தி உயிருக்கு போராடிய 19

## வெலிக்கடை சிறைக்கும் பரவியது கொரோனா

(கொழும்பு)

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையிலும் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 4 பெண் கைதிகளும் 2 ஆண் கைதிகளும் சிறை அதிகாரி 19

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாவதில் இழுபறி

### ஜோ பைடனா? டொனால்ட் ட்ரம்பா?

(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் இறுதி முடிவு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

எனினும், அமெரிக்காவில் மொத்தமாக 19

### கோப்பாய் கல்வியியற் கல்லூரியில்

## பொலிஸ் - இராணுவம் நள்ளிரவு முரண்பாடு

### இரு பொலிஸார் பணி இடைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப் 19

### நாட்டில் நேற்றும்

## +383 தொற்றாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில்நேற்றும் 383 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப் 19

## சுய தனிமைப்படுத்தலை தீவிரமாக கண்காணிக்குக

### ஜனாதிபதி கோட்டா பணிப்பு

(கொழும்பு)

சுய தனிமைப்படுத்தல்களை தீவிரமாக கண்காணிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

19

### கொரோனாவை கையாள முடியாவிட்டால்

# சுகாதார அமைச்சர் பவித்ரா பதவி விலக வேண்டும்

### முன்னாள் அமைச்சர் மங்கள

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியினால் கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியைக் கையாள முடியாவிட்டால், அவர் பதவியிலிருந்து விலகவேண்டுமே தவிர தனது உயிரைத் தியாகம் செய்யத் தயார் என்று கூறத்தேவையில்லை என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருக்கிறார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அண்மையில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மதநம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொண்ட செயற்பாடு பல்வேறு தரப்பினராலும் வெகுவாக விமர்சிக்கப்பட்டது.

இதனால் அதுகுறித்து அவர் கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் விளக்கமளித்தார். அதன்போது தனது உயிரை தியாகம் செய்வதனூடாக கொரோனா வைரஸை இல்லாதொழிக்க முடியுமென்றால், அதற்கும் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தை அடிப்படையாகக்கொண்டு தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மங்கள சமரவீர மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை சுகாதார அமைச்சரினால் கையாள முடியாவிட்டால் அவர் பதவி விலகவேண்டும்.

மாறாக தனது உயிரைத் தியாகமாக வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறத் தேவையில்லை. உயிர்த்தியாகம் அல்லது தற்கொலை என்பது பௌத்த தர்மத்திற்கு விரோதமானதாகும் "என்று குறிப்பிட்டிருக்கிறார். (ம-03)

# தென்மராட்சியில் விபத்து ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கடமை முடிந்து மோட்டார் சைக்கிளில் வீதியைக் கடக்கும் போது சாவகச்சேரி பகுதியில் இருந்து வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

இதில் பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த 43வயதான ந.சிவகுமார் என்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-03.30)

# அவதூறு ஏற்படுத்த முகநூலில் பதிவு

### பூநகரி பிரதேச சபை செயலாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(பூநகரி)

முகநூலில் அரசியல் கட்சி ஒன்றின் முழங்காவில் பிரதேச செயற்பாட்டாளர் ஒருவர் அவதூறு செய்தார் எனத் தெரிவித்து பூநகரி பிரதேச சபையின் செயலாளர் க. கம்சநாதன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த நபர் தனது பதவி நிலைக்கு அவதூறு ஏற்படுகின்ற வகையில் முகநூலில் பதிவு ஒன்றை மேற்கொண்டுள்ளார் என்றும் இது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் செயலாளர் தனது முறைப்பாட்டில் பதிவு செய்துள்ளார்.

நேற்றைய தினம் பூநகரி பொலிஸ் நிலையத்தில் குறித்த நபர் முகநூலில் பதிவேற்றிய பிரதியுடன் சென்ற செயலாளர் தனது முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். (ம-03,100)

## கண்ணீர் அஞ்சலி



யா / மயிலிட்டி றோ. க. த. க பாடசாலையின்
ஓய்வு பெற்ற அதிபர் திருமதி அ. லீலாவதி
அவர்களின் அன்புக் கணவர்
அமரர்
**கனகசபை அருளையா**
அவர்கள் அமரத்துவமடைந்த செய்தியறிந்து
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/ மயிலிட்டி றோ.க.த.க பாடசாலை

(4558)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### புலோலி - கொடிகாமம் வீதியில்

# மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதி விபத்து

### இளைஞன் படுகாயம்

(கரணவாய்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை (05) மாலை புலோலி-கொடிகாமம் வீதியில் உள்ள தேவரன் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்த இளைஞர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து அப்பகுதியில் உள்ள மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-03.60)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி | 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1949.12.21 — இறப்பு 2019.10.19

அமரர்
**மாணிக்கம் நாகேந்திரம்**
(ஓய்வு நிலை தபால் அதிபர் - யாழ். பிரதம தபாலகம்)
((ஐப்பசி சஷ்டி திதி : 06.11.2020))

கொண்டநாள் முதல் குறையேது கண்டேன்
கருமம் முழுதும் செய்து மகிழ்வாய் வைத்தீர்
கூண்டுக் கிளியாய் நானுமிங்கே
செய்வதறியாமல் துடிக்கின்றேன்.

செல்வ மகளை இழந்த துயரம்
மறக்க முன்னமே தவிக்கவிட்டு
எங்கே சென்றாய்?
உலவித் திரிந்த இடங்கள்
வாட்டி வதைக்குதையா!
ஆண்டு ஒன்று புரண்டோடினாலும்
அழியா நினைவுகளுடன்
மறு ஜென்மம் வரை காத்திருப்பேன்.
ஐயா!



பிறப்பு 1981.08.21 — இறப்பு 1998.08.25

அமரர்
**நிஷாலினி நாகேந்திரம்**
(சுகி)
((திதி: ஆவணிச் சதுர்த்தி))

அன்னைக்கு ஒரே பிள்ளை
அனைவருக்கும் செல்லப் பிள்ளை
ஆழ்கடலில் முத்தெடுத்து
பாசத்துடன் பூத்த மலர் மகளே!

ஒரே ஒரு முறை வந்து விடு
சிதறும் நினைவுகளை அள்ளிவிடு
ஒரே ஓர் முறை என்னிடம் பேசி விடு
என்னுள் எரியும் நெருப்பைத் தணித்து விடு
உன் பிரிவால் மாறாத் துயரில் வாடும்
அம்மா!

திருமதி ஞானகலாவதி நாகேந்திரம்
அல்வாய் தெற்கு, இலகடி, அல்வாய்.

(C-636)

# இரு குழுக்களிடையே வவுனியாவில் மோதல்

### இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள மதுபானசாலைக்கு முன்பாக இரு இளைஞர் குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று இரவு 8.40 மணியளவில் இடம்பெற்ற இம் மோதல் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், வவுனியா வைரவப்புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்திற்கு அருகே அமைந்துள்ள மதுபானசாலையில் மது அருந்திக் கொண்டிருந்த இரு இளைஞர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-03)

# கோப்பாய் கொரோனா வைத்தியசாலை தொடர்பில்
# மக்கள் அச்சமடையத் தேவையில்லை

## வைத்தியர் சத்தியமூர்த்தி



**(யாழ்ப்பாணம்)**

**கோப்பாய் கொரோனா வைத்தியசாலை தொடர்பில் அப்பிரதேச மக்கள் பீதி அடையத் தேவையில்லை என யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று வியாழக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர் "யாழ்.போதனா வைத்தியசாலையின் கீழ் கோப்பாயில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுக்கான விசேட சிகிச்சை நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அங்கு 18 நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் 18 பேரும் தென் பகுதியைச் சேர்ந்தவர்கள். அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தனிமைப்படுத்திலிருந்த அவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கோப்பாய் விசேட சிகிச்சை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள்.

கோப்பாய் விசேட சிகிச்சை நிலையத்தில் எமது வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள் அங்கு சிகிச்சை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்த விசேட வைத்தியசாலையில் 350 பேருக்கு சிகிச்சை அளிக்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதல் நிலையாக சாதாரணமாக தொற்றுக்குள்ளானவர்கள், வேறு எந்த பிரச்சினையும் இல்லாதவர்கள் இந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவார்கள். அவர்களுக்கு இரண்டு கிழமைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அவர்கள் தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

இதே சமயம் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் சில கட்டடங்கள் அதாவது தங்கியிருக்கின்ற வசதி உள்ள கட்டடங்கள் மாத்திரமே வைத்தியசாலை தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

ஏனைய கட்டடங்கள் உரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. ஏனெனில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் போது அதனை இலகு படுத்துவதற்காக இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது.

இதுதவிர கோப்பாய் பிரதேசத்தில் உள்ள மக்கள் எந்த வித பய பீதி அடையத் தேவையில்லை. ஏனெனில் நோயாளர்கள் சரியான முறையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

அவர்களிடமிருந்து வெளியேறும் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்பட்டு தெல்லிப்பழையில் எரியூட்டப்படுகிறது.

எனவே சமுதாயத்திற்கோ அல்லது அப்பகுதி மக்களுக்கோ தொற்று ஏற்பட வாய்ப்பில்லை. குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் மிக அவதானமான முறையில் சுய பாதுகாப்பு அங்கிகள் அணிந்து சேவையை வழங்கி வருகின்றார்கள்.

ஆகவே பொதுமக்கள் அருகில், இருப்பவர்கள் இது தொடர்பில் பீதி அடையத்தேவையில்லை. தங்களுக்கு ஏதாவது முறைப்பாடுகள் இருக்குமாயின் போதனா வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்ள முடியும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒருநாளைக்கு 400 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளக் கூடிய வசதிகள் காணப்படுகின்றன.

வைத்தியசாலையில் உள்ள இரண்டு இயந்திரங்களினைப் பயன்படுத்தி 7 பேர் கடமையில் ஈடுபட்டுள்ளார்கள். காலையில் எட்டு மணிக்கு பரிசோதிக்கப்பட்டு இரவு 7 மணிக்கு முடிவுகளை வெளியிடக் கூடியவாறாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இதற்கு மேலதிகமாக எதிர் வரும் வாரம் யாழ்ப்பாணம் மருத்துவ பீடத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இன்றைய நாள் வரை யாழ். மாவட்டத்தில் சமூகத்தொற்றில்லை. எதிர்வரும் காலங்களில் நடைபெறுபவற்றை சரியாக எதிர்வுகூற முடியாது. பொதுமக்கள் சரியான விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் சமூகத் தொற்று ஏற்படுவதை தவிர்க்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-7)

## குணமடைந்தோர் 6623

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் மேலும் 765 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன் படி கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் 6 ஆயிரத்து 623 பேர் இதுவரை பூரணமாக குணமடைந்துள்ளனர். (ஜ-4)

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தில் நாளை 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் மணல் ஏலவிற்பனை இடம்பெறவுள்ளது.

ஏலவிற்பனைக்கான மணலினை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம்.

குறித்த தினத்தில் ஊரடங்கு தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருப்பின் அன்றைய தினம் ஏலவிற்பனை நடைபெறமாட்டாது என்பதுடன் பிறிதொரு தினம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கிளிநொச்சி மாவட்ட/நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

# நாட்டின் அதி முக்கிய பிரபுக்கள் கொரோனா தடுப்பூசியை பெற்றுள்ளனர்

## எதிர்க்கட்சி சாடல்

(கொழும்பு)

நாட்டின் அதி முக்கிய பிரபுக்கள் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று தம்மை தாக்கக்கூடாது என்னும் நோக்கில் சீனாவிடமிருந்து தடுப்பூசி பெற்றுக்கொண்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தடுப்பூசி ஒன்றின் விலை 70 அமெரிக்க டொலர்கள் எனவும் இரண்டு கைகளிலும் இந்தத் தடுப்பூசி ஏற்றப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் துணை ஜனாதிபதி சேக் முஹமட் பின் ரசீட் அல் மக்டும் அண்மையில் இந்தத் தடுப்பூசியை ஏற்றிக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று நாட்டில் வாழும் அதி முக்கியமான பிரபுக்கள் சீனாவிடமிருந்து தடுப்பூசி பெற்றுக் கொண்டுள்ளதாகவும் மக்கள் பெரும் துயரத்தை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த அதி முக்கிய பிரபுக்கள் யார் என்பதனை நளின் பண்டார சுட்டிக்காட்டாத போதிலும் ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்களையே அவர் மறைமுகமாக குற்றம் சாட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## கொரோனா நோயாளிகள் அடையாளம்

(கொழும்பு)

மாவனல்லையில் அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்த தம்பதியினர் உள்ளிட்ட 9 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, குறித்த திருமண வைபவத்தில் கலந்து கொண்ட 120 இற்கும் அதிகமானோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக மாவனல்லை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கெமுனு விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த திருமண வைபவம் சுகாதார வழிகாட்டலுக்கு அமைவாக இடம்பெற்றுள்ள போதும் இரண்டாவது நாள் மணமகனின் வீட்டில் நடத்தப்பட்ட வைபவத்தில் சுகாதார வழிகாட்டல்கள் கடைப்பிடிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுளார்.

இதேவேளை கேகாலை மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான 150 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள நிலை யில் 3 ஆயிரத்து 31 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கேகாலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

(கொழும்பு)

கொழும்பு, வெலிக்கட சிறைச்சாலையில் ஏழு பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

நான்கு பெண்கள் உள்ளிட்ட ஆறு கைதிகளும் ஒரு பெண் சிறைச்சாலை அதிகாரியுமே இவ்வாறு கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.


கைதிகள் வெலிகந்த ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


இந் நிலையில் சிறைச்சாலையில் கொரோனா எவ்வாறு பரவியது என்பது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கொரோனா நோயாளர்களுடன் தொடர்புகளை பேணியவர்களை தனிமைப்படுத்தி பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# மின்சாரத்தையும் குடிநீரையும் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்

(கொழும்பு)

மின்சாரத்தையும் குடிநீரையும் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு மின்சக்தி வள அமைச்சும் நீர் விநியோக சபையும் கோரிக்கை விடுத்துள்ளன.





மேல் மாகாணம் உள்ளிட்ட நாட்டின் சில பகுதிகளில் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அதிகமானோர் வீடுகளில் தங்கியிருப்பதால் மின்சாரம் மற்றும் நீர் பாவனை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், பொது மக்கள் நீரையும் மின்சாரத்தையும் சிக்கனமாகப் பயன்படுத்தாத பட்சத்தில் எதிர்காலத்தில் அவற்றைத் தடையின்றி விநியோகிப்பதில் சிக்கல் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# கொரோனாவை கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைக்க வேண்டும்

## வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பொது மக்களின் ஒத்துழைப்பின்றி கொரோனாத் தொற்றினை கட்டுப்படுத்த முடியாது என வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாண நகரில் பொலிஸாரால் கொரோனா தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விழிப்புணர்வு செயற்பாட்டில் கலந்துகொண்ட வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில்கொரோனாத் தொற்று அதிகளவில் பரவி வருகின்றது. வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை நான் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவியேற்ற பின் கொரோனா ஒழிப்பு தொடர்பில் பொலிஸாரால் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு அங்கமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்கள் முகக் கவசம் அணிதல் தொடர்பான ஒரு விழிப்புணர்வு செய்றபாட்டினை மேற்கொண்டு வருகின்றோம்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரைக்கும்கொரோனாத் தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

அதாவது சுகாதார திணைக்களத்தினரின் சுகாதார நடைமுறைகளை கட்டாயமாக பொது மக்கள் பின்பற்ற வேண்டும்.

அந்த வகையில் மக்கள்



பெரும்பாலும் வீடுகளில் இருந்து தங்களுடைய கடமைகளைச் செய்வது மிகச் சாலச் சிறந்தது.

எனினும் வடக்கு மாகாணத்தில் குறித்த தொற்றினை கட்டுப்படுத்த வேண்டுமாக இருந்தால் பொதுமக்களின் ஒத்துழைப்புடனே அது சாத்தியமாகும். மக்கள் தற்கால சூழ்நிலையில் தங்களையும் தங்களுடைய சமூகத்தினையும் பாதுகாக்க வேண்டியது பொறுப்பாகும் என சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-5-33)


# பொது அறிவித்தல்
# பிரதேச சபை, வேலணை

### 1. படவரைஞர்களை பதிவு செய்தல்

2021 ஆம் ஆண்டு படவரைஞர்களாக பதிவு செய்ய விரும்புவோர்களில் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்தோர் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை புதிப்பிப்பதோடு, புதிதாக பதிவு செய்ய விரும்புவோர் 2021 ஆம் ஆண்டு பங்குனி 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளவும். மேலதிக விபரங்களிற்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

### 2. ஒப்பந்தகாரரைப் பதிவு செய்தல்

2020 ஆம் ஆண்டிற்கான நிர்மாணப் பொறியியல் வேலைகளை செய்து வழங்குவதற்கு தேசிய நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பதிவை வைத்திருக்கும் ஆர்வமுடைய மனுதாரர்கள் பதிவை மேற்கொள்ள முடியும்.

### 3. வழங்குநரைப் பதிவு செய்தல்

2020 ஆம் ஆண்டில் சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்ள விரும்பும் தகைமை வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 15.01.2021 ஆம் திகதி வரை தலைமை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### 4. வியாபார உரிம அனுமதிப்பத்திரம்

இப்பிரதேசசபை எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்கு பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய உப அலுவலகங்களில் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31-03-2021 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade License) பெற்றுக் கொள்ளவும். 31-03-2021 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாதவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

### 5. சூழல் பாதுகாப்பு உரிமம்

தொழில் / வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப்பெற்றுக் கொள்ளலாம்.

### 6. துவிச்சக்கரவண்டி உரிமம், மிருகங்களுக்கான உரிமம்.

துவிச்சக்கரவண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 31-03-2021 ஆம் திகதிக்கு முன்னர் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2021 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி, வளர்ப்பு நாய்களுக்கான உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

### 7. விளம்பரங்கள் அமைத்தல் / காட்சிப்படுத்தல்

பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேச சபையின் அனுமதியினைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்தல் வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும்.

### 8. கட்டட அனுமதி வழங்கல்.

• தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை புனரமைப்பதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும்.

• புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியில் இருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியை புதிப்பிக்க வேண்டும்.

• அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.

• சபை எல்லைக்குள் குழாய்க்கிணறு அமைப்வர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.

### 9. வீதி ஒழுங்கும், தெருவோர வியாபாரமும்.

1. வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. வியாப்பார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடத்துமாறு வர்த்தக நிலைய உரிமையாளருக்கு அறியத்தருகின்றேன்.

2. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறி, பழங்கள், தேங்காய், முட்டை என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.

### 10. கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல்.

சபை எல்லைக்குள்ளாக ஏதேனும் பொது வழி மீது அல்லது ஏதேனும் பொது வழி அருகில் கால்நடைகள் கட்டப்படவோ அல்லது அலைந்து திரியவோ விடாது கால்நடைகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும் என்பதோடு கட்டி வளர்க்காதுவிட்டால் சபையினால் பிடிக்கப்பட்டு பிரதேச சபைகள் சட்டத்திற்கமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்

### 11. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்.

திண்மக் கழிவுகளை பிரதேச சபைக்கு ஒப்படைக்கும் போது அவை தரம் பிரித்து வழங்க வேண்டும் என்பதுடன் திண்மக் கழிவுகள் பொது இடங்களில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்பட வேண்டும். அல்லாதவிடத்து பிரதேச சபைச் சட்ட ஏற்பாட்டிற்கு அமைவாக பிரதேச சபையால் தன்னுரித்தாக்கப்பட்டு துப்புரவு செய்யப்படும்.

### 12. பொதுச் சுகாதாரத்தை பேணுதல்.

உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி,
தவிசாளர்,
வேலணை பிரதேசபை.

(C-634)

# வேலணை பிரதேச சபை
# 2021ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

**வேலணைப் பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், வாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும் என்பவற்றை 01.01.2021 தொடக்கம் 31.12.2021 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 06.11.2020 முதல் 19.11.2020 மதியம் 2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 20.11.2020 பி.ப. 1.00 மணிவரை
கேள்வி திறக்கும் திகதி:- 20.11.2020 பி.ப 1.30 மணி

| தொ இல | சந்தைகளின் பெயர் | | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்விவைப்புப் பணம் | 2021 ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்ததொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | வேலணைசெட்டிபுலம் மீன்சந்தை | | --------- | 2,000.00 | 5,000.00 | 19,800.00 |
| 2 | வேலணைஅம்பிகைநகர் மீன்சந்தை | | --------- | 2,000.00 | 5,000.00 | 14,300.00 |
| 3 | சரவணைமீன் சந்தை | | -------- | 2,000.00 | 5,000.00 | 8,800.00 |
| 4 | அல்லைப்பிட்டிமீன் சந்தை | | -------- | 2,000.00 | 5,000.00 | 99,000.00 |
| 5 | நயினாதீவுமீன்,மரக்கறிச் சந்தை | | -------- | 2,000.00 | 5,000.00 | 33,600.00 |
| 6 | மண்டைதீவுவாராந்தசந்தை | | -------- | 2,000.00 | 5,000.00 | 11,600.00 |
| 7 | சாட்டிவாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும் உள்ளடங்களானசுற்றுலாமையம் (படகுசேவைதவிர்த்து) | | ------ | 2,000.00 | 10,000.00 | 341,000.00 |
| வேலணைதுறையூர் மொத்தமீன் விற்பனைச் சந்தையும் சந்தையில் அமைந்துள்ளகடைகளும் | | | | | | |
| 8 | வேலணைதுறையூர் மீன்சந்தை (புதியகட்டிடம்) | | ------------ | 2.000.00 | 10,000.00 | 220,000.00 |
| 9 | சிற்றுண்டிச்சாலை | | 1,500.00 | 2,000.00 | 5.000.00 | 89,100.00 |
| 10 | கடைஇல-5 கோழிக்கடை | | 1,000.00 | 2,000.00 | 5,000.00 | 37,400.00 |
| வேலணை பொதுச்சந்தை (6ம் வட்டாரம்) | | | | | | |
| 11 | மரக்கறி,மீன் | | ------------ | 2.000.00 | 5,000.00 | 30,250.00 |
| 12 | சிற்றுண்டிச்சாலை | | 1,750.00 | 2.000.00 | 10,000.00 | 27,600.00 |
| 13 | கோழிக்கடை | | 750.00 | 2.000.00 | 10,000.00 | 253,550.00 |
| புங்குடுதீவு முற்றவெளிச் சந்தையும் கடைத்தொகுதியும் | | | | | | |
| 14 | கோழிக்கடை | | 5,00.00 | 2,000.00 | 5,000.00 | 75,600.00 |
| 15 | கடை இல-5 சிற்றுண்டிச்சாலை | | 6,00.00 | 2.000.00 | 5,000.00 | 14,058.00 |
| 16 | புங்குடுதீவு முற்றவெளி மீன்,மரக்கறிச்சந்தை | | ------ | 2.000.00 | 5,000.00 | 33,550.00 |
| 17 | கடை இல 01 | புங்குடுதீவு உப அலுவலகத்திற்கு அருகிலுள்ளகடைகள் | 1,500.00 | 2,000.00 | 15,000.00 | 180,000.00 |
| 18 | கடை இல 03 | | 1.500.00 | 2,000.00 | 15,000.00 | 180,000.00 |
| நயினாதீவு சந்தை கடைத்தொகுதி | | | | | | |
| 19 | கடை இல 01 | | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 20 | கடை இல 02 | | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 21 | கடை இல 03 | | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 22 | கடை இல 04 | | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 23 | கடை இல 05 | | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 24 | கடை இல 06 | | 1,100.00 | 2,000.00 | 11,000.00 | 132,000.00 |
| 25 | கடை இல 07 | | 1,100.00 | 2.000.00 | 11,000.00 | 132,000.00 |
| 26 | கடை இல 08 | | 9,00.00 | 2,000.00 | 9,000.00 | 108,000.00 |

## பொதுவான நிபந்தனைகள் :- சந்தை

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

2. கேள்வியில் பங்குபற்ற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமுகமளித்தல் வேண்டும்.

3. கேள்விப்படிவங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை "தவிசாளர், பிரதேசசபை, வேலணை" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியில் "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணைவீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 20.11.2020ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

4. பொதுச்சந்தைகளில் இருந்து 500மீற்றர் சுற்றளவுள்ள எல்லைக்குள் மரக்கறி, பழங்கள், தேங்காய், கோழி, இறைச்சி போன்ற பொருட்கள் விற்பனை செய்யமுடியாது.

5. கடைகள், இறைச்சிக்கடைகள் வருடாந்த உரிமத்தினை செலுத்துதல் வேண்டும்.

6. தெரிவு செய்யப்படும் கோழி இறைச்சிக்கடைக்குரிய கேள்வித் தொகையின் 2/3 பகுதியையும் ஏனையவர்கள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் 24.11.2020 திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும். பராமரிப்பு வேலைகள் குத்தகைதாரர்களாலேயே சபையின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

7. கேள்விப்படிவத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் உடன்படிக்கையினை இரத்துச்செய்யும் உரிமை பிரதேச சபைக்கு உண்டு.

8. தவறுநர் பட்டியலில் உள்ளவர்கள் கேள்விகோரலில் பங்குபற்ற முடியாது.

9. மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்களிலும் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

## நிபந்தனைகள் - கடைத்தொகுதி

1) ஒருவர் ஒருகடைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

2) கேள்விப்படிவத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

3) கேள்வி கோரலில் சித்தி பெற்றவர்கள் குறித்த கேள்வித் தொகையினை (Key Money) ஒரேதடவையில் செலுத்தி பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினைச் செய்துகொள்ளல் வேண்டும் என்பதுடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும். தவறும் பட்சத்தில் செய்துகொள்ளும் உடன்படிக்கையினை இரத்துச் செய்யும் அதிகாரம் பிரதேச சபைக்கு உண்டு என்பதனையும் கருத்தில் கொள்வதோடு கேள்வித் தொகையினை (Key Money) எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றோம்.

4) மூன்று மாத வாடகையை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

5) மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினைச் செலுத்துதல் வேண்டும். குறித்த மாத வாடகைப் பணத்தினை அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தவறும் பட்சத்தில் மாதாந்த வாடகையுடன் சேர்த்து மாதாந்த வாடகைப் பணத்தின் 10% தண்டப்பணமாக அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும். டிசெம்பர் மாதத்திற்குரிய வாடகைப் பணத்தினை டிசெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்துதல் வேண்டும்.

6) சுகாதார வைத்திய அதிகாரியின் சிபார்சினைப் பெற்று, சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும். கடைகள் யாவும் தற்போதுள்ள நிலையிலேயே கேள்வியில் சித்தி பெற்றவருக்கு வழங்கப்படும்.

7) பராமரிப்பு வேலை, கழிவகற்றல் என்பவற்றை தாங்களே மேற்கொள்ளல் வேண்டும்.

**திரு.ந.கருணாகரகுருமூர்த்தி,**
**தவிசாளர்,**
**வேலணை பிரதேச சபை.** (சி-635)

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 08.10.2020 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்
பிறப்பு: 10/05/1950
இறப்பு: 08/10/2020



**அமரர். உருத்திரசிங்கம் துரைசிங்கம்**

அவர்களின் அஸ்தி 06.11.2020 இன்று காலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்பட்டு பின் 07.11.2020 நாளை சனிக்கிழமை அவரது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும் என்பதனை எம் அன்புக்குரிய அனைவருக்கும் தாழ்மையுடன் அறியத் தருகின்றோம்.

(4556)

பிரதான வீதி,
வடலியடைப்பு.

மனைவி, மகன்
குடும்பத்தினர்.

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## வரவு- செலவுத்திட்டம் - 2021

நகரசபை கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 255 ஆம் அத்தியாயமான 178 (3) ஆம் பிரிவின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்ட வரவு- செலவுத் திட்டம் 2020.11.06 ஆம் திகதி தொடக்கம் ஏழு (07) நாட்களுக்கு அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பார்வைக்காக தலைமை அலுவலகம், சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் ஆகிய மூன்று பொது நூலகங்களிலும் வைக்கப்பட்டிருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிவமங்கை இராமநாதன்,**
**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**

**நகராட்சிமன்ற அலுவலகம்,**
**சாவகச்சேரி.** (சி-633)

# முல்லை வருபவர்கள் தனிமைப்படுத்தப்படுவர்
## மாவட்ட செயலர் விமலநாதன்

(முல்லைத்தீவு)

வெளி மாவட்டங்களிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருபவர்கள், 14 நாட்களுக்கு கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவார்கள் என மாவட்ட செயலர் க.விமலநாதன் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கொரோனாத் தொற்று அவசர நிலை தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்பவர்களுக்கும் இதே நிலை காணப்படும் எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# பொதுப்போக்குவரத்துகளில் பயணிப்போர் கவனத்திற்கு

## சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(குப்பிழான்)

வடமாகாணத்தில் பொதுப் போக்குவரத்துக்களில் ஈடுபடும் பொதுமக்கள் தாம் பயணிக்கும் வாகனங்களின் இலக்கங்களைத் தரவாக குறித்து வைத்துக் கொள்ளுமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

யாழிலுள்ள வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளின் பதிவு இலக்கத்தை அதன் முற்பகுதியில் காட்சிப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் தாம் பயணம் செய்யும் பேருந்துகள் அல்லது முச்சக்கரவண்டிகளின் இலக்கங்களைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அல்லது கைத்தொலைபேசியில் படமெடுத்து அடையாளப்படுத்திக் கொள்ளுங்கள்.

இதன்மூலம் கொரோனாத் தொற்றுடைய ஒருவர் இவ்வாறான பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பயணம் செய்திருந்தால் நீங்களும் அதில் பயணம் செய்திருந்தால் உங்களைப் பரிசோதனை செய்து கொள்வதற்கு இலகுவானதாகவிருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-7-18)

# முகக்கவசமே முக்கியம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தை வளாகத்தில் நேற்று "முகக்கவசமே முக்கியம்" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகம், சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பொலிஸார் மற்றும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரிபணிமனையினர் ஆகியோர் இணைந்து இச்செயற்பாட்டினை முன்னெடுத்தனர்.

இதன்போது சந்தை வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு இலவசமாக முகக்கவசங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி இ.சிவமங்கை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதோகுமார், சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ராஜபக்ஷ, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர். (5-7-30)

# 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் 118 மில்லியன் உத்தேச வருமானம் எதிர்பார்ப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் 2021ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கும் போது மக்கள் நலன் சார்ந்த பல முக்கிய விடயங்களை உள்ளடக்கியிருப்பதாக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபையின் 2021ஆம் ஆண்டிற்கான வரவு -செலவுத் திட்டம் 118 மில்லியன் ரூபாய் உத்தேச வருமானத்தை எதிர்பார்த்துத் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதனுள் சபையின் சிறுவர் பூங்கா மற்றும் பொது மைதான புனரமைப்பு, தேவையுடைய வீதிகள் புனரமைப்பு, மலக்கழிவுகளை உரமாக்கும் தொழிற்சாலை மற்றும் சாவகச்சேரி பொதுச் சந்தையின் நவீன கட்டடத் தொகுதியில் மலசலகூடத் தொகுதி அமைத்தல் உள்ளிட்ட பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வுள்ளோம்.

அத்துடன்தற்போது கொரோனா அச்ச சூழ்நிலையில் சாவகச்சேரி மரக்கறிச் சந்தை மற்றும் மீன் சந்தைகளில் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுகாதார விதிமுறைகள் தொடர்பில் சபை உத்தியோகத்தர்கள் கண்காணித்து வருகின்றனர் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-7-30)

# யாழில் 226 பரிசோதனைகள் எவருக்கும் தொற்றில்லை


(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை 226 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளிலேயே குறித்த பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-7-18)

# வெள்ளக்காடாக காணப்படும் வீதி



(கரணவாய்)

வடமராட்சி தெற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கரவெட்டி கவுடலை வீதி ஐந்து வருடங்களுக்கு முன் பல இலட்சம் ரூபாய் செலவு செய்து கொங்கிறீட் வீதியாக மாற்றப்பட்டது. நேற்றுப் பெய்த மழையால் இவ்வீதி வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது.

மழை வெள்ளம் ஓட முடியாத நிலையில் தேங்கி நிற்று சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது.

பலமுறை இவ்வீதியைத் திருத்தி தருமாறு கேட்கப்பட்ட பொழுதும் திருத்தித் தருவதாகக் கூறப்பட்டும் இதுவரை திருத்தப்படவில்லை.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ் வீதியைப் புனரமைத்துத் தருமாறு பொது மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-7-60)

# பகலில் ஒளிரும் தெருவிளக்குகள் அகற்றப்படும்-தவிசாளர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பகலிலும் தெரு விளக்குகள் அணைக்கப்படாமல் தொடர்ந்து ஒளிரும் பட்சத்தில் குறித்த தெரு விளக்குகளை உடனடியாக அவ்விடத்தில் இருந்து அகற்றி தேவையுள்ள வேறு இடத்திற்கு மாற்றிப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபை மக்களின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு சபை நிதி மற்றும் ஏனைய நிதிமூலங்கள் ஊடாக ஏராளமான தெரு விளக்குகளைப் பொருத்தியுள்ளது.

மேலும் தெருவிளக்குகள் பொருத்துவதற்கு சபையால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

நகரசபை மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு அதிகளவான தெரு விளக்குகளைப் பொருத்தி வருகின்ற போதிலும் மக்கள் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளத் தவறுகின்றனர்.

பல இடங்களில் பகல் நேரங்களிலும் தெரு விளக்குகள் ஒளிர்ந்த வண்ணம் உள்ளன.

இதனால் மின் விரயம் ஏற்படும் அதேநேரம் மின்குமிழ்களும் விரைவில் பழுதடைந்து விடுகின்றன.

எனவே மக்கள் அனைவரும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு நடந்து கொள்ளத் தவறும் பட்சத்தில் பகலிலும் ஒளிரும் தெரு விளக்குகளை அவ்விடத்தில் இருந்து அகற்ற சபை நடவடிக்கை எடுக்கும் என மேலும் அவர் தெரிவித்தார். (5-30)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

விதையனைத்தும் விருட்சமே இளைஞர் அணியுடன் மாற்றத்திற்கான மாவட்ட இளைஞர் பேரவை, தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் என்பன இணைந்து நடத்தும் மாபெரும் இரத்ததான முகாம் நாளை மறுதினம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை உரும்பிராய் வடக்கு கிராமிய உழைப்பாளர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தற்போது யாழில் நிலவும் இரத்தத் தட்டுப்பாடு நிலைமையைக் கருத்திற் கொண்டு இடம்பெறும் குறித்த இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொண்டு உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-7-18)

## கொரோனா தொற்றால் பாதிக்கப்படும் கடற்றொழிலாளர்கள்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பேப்பாரப்பிட்டிப் பகுதி கடற்றொழிலாளர்கள் தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று காரணமாக அன்றாட ஜீவனோபாயத்தினை இழந்துள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

கடல் தொழிலையே நம்பி வாழ்கின்ற மீனவக்குடும்பங்கள் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று காரணமாக அன்றாடம் கடற்றொழிலில் பிடிக்கின்ற மீன்களை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை வெளியிட்டு உள்ளனர்.

வியாபாரிகள் மீன்கொள்வனவிற்கு வராத காரணத்தினாலும் மீன்களை தற்போது விற்பனை செய்ய முடியாத காரணத்தினால் கருவாடாக்கி விற்பனை செய்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

வழமையாகவே ஜனவரி மாதம் தொடங்கி ஒக்டோபர் மாதம் வரைக்கும் ஓரளவான மீன்களே பிடிக்கப்படுவதாகவும் நவம்பர், டிசெம்பர் மாதங்களிலே தான் பாரிய அளவில் பிடிக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கொரோனா தொற்று காரணமாக தற்போது 2500 கிலோவுக்கும் மேற்பட்ட கருவாடுகள் தங்களிடமுள்ளது எனவும் அதனையும் விற்பனை செய்ய முடியாத நிலை உள்ளது எனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-7-316)

# பி.சி.ஆர்.செய்த நபருக்கு கொரோனா உறுதி

## பொய்யான தகவல் வழங்கியதால் அவரை தேடுவதில் சிக்கல்

(கொழும்பு)

தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்காக நபரொருவர் மாதிரியை பெற்றுக் கொடுத்து அதனுடன் பொய்யான தகவல்களை வழங்கி உள்ளதாக இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த நபர் மீது மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் அடிப்படையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப் பட்டுள்ள போதும் அவர் வழங்கிய பொய்யான தகவல்கள் காரணமாக அவரை தேடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார்.

அதன்படி, நபர் ஒருவருக்கு கொவிட்-19 அறிகுறிகள் காணப்பட்டால் முதலாவதாக வீட்டினுள் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என இராணுவத் தளபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த சந்தர்ப்பத்தில் பிரதேசத்தின் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு இல்லாமல் முதலில் வைத்தியசாலையை நோக்கிச் செல்வது ஏற்புடையதல்ல என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (நி-7)



**வவுனியாவில் சுகாதாரத் திணைக்களம், இளைஞர்கள் சம்மேளனம் மற்றும் பொலிஸாரும் இணைந்து பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளுக்கும் வவுனியா பொது பேருந்து நிலையத்திலும் கொரோனா விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன. இதில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மு.மகேந்திரன் மற்றும் உதவிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள், வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.**

**(படம்: வசந்தரூபன்)**

# மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் சில மாவட்டங்களுக்கு மண்சரிவு சிவப்பு அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. இதற்கமைவாக இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி, எஹெலியகொடை, எலபாத்த, குருவிட்ட ஆகிய பிரதேசங்களுக்கும் கேகாலை மாவட்டத்தில் ரூவான்வெல்ல பிரதேச பிரிவுக்கும் இவ்வாறு மண்சரிவு அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பிரதேசங்களில் பெய்து வரும் கடும் மழையை கவனத்தில் கொண்டு இந்த அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# தீவிரமாகும் டெங்கு

## மட்டக்களப்பில்...

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாண்டு 2 ஆயிரத்து 650 பேர் டெங்குத் தாக்கத்துக்குள்ளாகியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தின் பிராந்திய தொற்றியியலாளர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் டெங்கின் தாக்கமும் அதிகரித்துள்ள நிலையில், அவற்றைக் கட்டுப்படுத்தும் வகையிலான பல்வேறு நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தற்போது மழையுடன் கூடிய வானிலை ஆரம்பமாகியுள்ள நிலையில், டெங்குத் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## மாத்தளையில்...

(மாத்தளை)

மாத்தளை, இரத்தொட்டைப் பிரிவில் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் டெங்குத் தொற்றாளர்கள் 20 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இரத்தொட்டை பிரதேச செயலாளர் நிஷந்த தினப்பிரய ஹேரத் தலைமையில், நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்திலேயே இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடம் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் பிரதேச செயலகம், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பொலிஸாரின் ஒத்துழைப்பால் இரத்தொட்டையில் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளதாகவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ஐ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 168cm
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. வங்கி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11359

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா: செவ் 3 இல்
உயரம்: 6'2"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. கட்டாரில் சாரதி
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11360

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா: 30 செவ் 12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. நகைக்கடை உரிமையாளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/11361

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மகம் 1
கி.பா: 10 ¼ செவ் 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. வெளிவாரி கற்கைநெறி பயிலுநர் களஞ்சியக் காப்பாளர் அரச
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11362

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா:16 ½சூரி,செவ் 7இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: தகுந்த அரச உத்தியோகத்தர் அல்லது வெளிநாட்டவர்
தொ.இ: G/11388


பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 2
கி.பா: 36 ¾ செவ் 11 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Software Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி தகுந்த அரச, தனியார் உத்தியோக மணமகன்
தொ.இ: G/11392

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: 39 செவ் 8 இல்
உயரம்: 154cm
தகைமை/தொழில்: பல்கலைக்கழக மாணவி.
எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன் மட்டும்
தொ.இ: G/11393

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 61 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B.Sc, M.Sc, Teacher
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச, தனியார் வங்கி உத்தியோகத்தர்
தொ.இ: G/11395

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# 200 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது



(பளை)

யாழ்ப்பாணம் ஆழியவளை கடற்பரப்பில் 200 கிலோவுக்கும் அதிகமான கேரளக் கஞ்சா கடற்படையினரால் பிடிக்கப்பட்டுள்ளதுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை உடுத்துறை பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படை டோரா பிரிவினரால் நேற்று அதிகாலை 2 மணியளவில் ஆழியவளை கடற்பரப்பில் இருந்து ஆறு கிலோ மீற்றர் எல்லைக்குள் வைத்து இந்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் இடத்திலிருந்து சுமார் 20க்கும் மேற்பட்ட பொதிகள் செய்யப்பட்ட 200 கிலோ நிறையுடைய கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

மீனவர்கள், மீட்கப்பட்ட கஞ்சாவுடன் பளை பொலிஸாரிடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளைப் பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-7-101)

# கனகராயன் குளத்தில் தனிமைப்படுத்தப்பட்ட தென்பகுதியைச் சேர்ந்த அறுவர்

(நெளுக்குளம்)

வவுனியா கனகராயன் குளத்தில் தென் பகுதியில் இருந்து வருகை தந்திருந்த 6 பேரை நேற்று முன்தினம் சுகாதார திணைக்களத்தினர் தனிமைப்படுத்தியுள்ளனர்.

குறித்த 6 பேரும் கனகராயன்குளம் புதூர் பகுதியில் வர்த்தக நிறுவனத்தில் விளம்பரப் பலகையினை பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்தபோது வவுனியா வடக்கு சுகாதார பிரிவினர் விசாரணையினை மேற்கொண்ட போது அவர்கள் கொழும்பில் இருந்து கடந்த 29 ஆம் திகதி வந்தவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

தொடர்ந்து அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் கனகராயன்குளத்தில் உள்ள விடுதியொன்றில் தங்கியிருந்ததுடன் கனகராயன்குளத்தில் உள்ள பல வர்த்தக நிலையங்களுக்கும் சென்று வந்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த 6 பேரும் கனகராயன்குளத்தில் தங்கியிருந்த விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை அவர்கள் சென்று வந்த வர்த்தக நிலையங்கள் சுகாதார பகுதியினரால் மூடப்பட்டுள்ளதுடன் அப்பகுதி மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது. (5-299)

# முல்லைத்தீவில் மூடப்படும் தனிமைப்படுத்தல் முகாம்கள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஆறு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருந்தும் 500 பேருக்கு மேல் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸினுடைய தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் இருவர் இனம் காணப்பட்டனர்.

இவ்வாறு கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளும் பி.சி.ஆர். சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்ற ஆறு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருந்து 500 பேருக்கு மேல் இதுவரையில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற கொரோனா வைரஸ் நிலைமைகள் தொடர்பான விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு கேப்பாபிலவு விமான படைத் தளம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட படைத் தலைமையகத்தின் கீழ் இயங்கிய 3 தனிமைப்படுத்தல் மையங்களும் மூடப்படுகின்றன என்பதையும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்பு உடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் உள்ளவர்களை தற்போது வீடுகளில் தனிமைப்படுத்துகின்ற நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் இந்த மூன்று தனிமைப்படுத்தல் மையங்களும் மூடப்படுகின்றன என்பதும் இது எவ்வாறு மாற்றப்பட வேண்டும் என்பது தொடர்பான அறிவித்தல்கள் இதுவரை கிடைக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று மாலை வெளியான தகவல்களின் அடிப்படையில் இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் 222 பேர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (5-7-281)

# விபத்தில் இளைஞர் படுகாயம்

(குருமன்காடு)

வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியில் வீதியில் உறங்கிக் கொண்டிருந்த மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இவ்விபத்துச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வீரபுரம் நோக்கி வவுனியா செட்டிகுளம் பிரதான வீதியூடாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞர் சூடுவெந்தபுலவு பகுதியினை அண்மித்த சமயத்தில் வீதியில் உறங்கிக்கொண்டிருந்த மாட்டுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார்.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற 26 வயது இளைஞர் படுகாயமடைந்த நிலையில் பொதுமக்களின் உதவியுடன் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த உளுக்குளம் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் மோட்டார் சைக்கிளையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர். (5-250)

# தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுச் சந்தேகம் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அறிவுறுத்தலுக்கமைய 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற கொரோனா பாதுகாப்புச் செயலணிக் கூட்டத்தில், மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகனன், பிரதமர் அலுவலகத்தினால் இது தொடர்பான சுற்றறிக்கை மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இதன் பிரகாரம், இந்த 10ஆயிரம்ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகளை, இரண்டு பிரிவுகளாக தலா 5ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொதிகளாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் மேற்கொண்டு வருகிறார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 90 குடும்பங்களைச் சேர்ந்த 487 பேர் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாக பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சரவணபவன் நேற்று முன்தினம் நடைபெற்ற கொரோனா பாதுகாப்புச் செயலணிக் கூட்டத்தில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (5-7)


# மருத்துவக் குடிநீர் வழங்கல்

(பரந்தன்)

வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கரைச்சிப் பிரதேச சமூக மருத்துவ உத்தியோகத்தர்களால் கொவிட்-19 நோய் எதிர்ப்புசக்தி குடிநீர் அறிமுக நிகழ்வு நேற்று கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

கரைச்சி பிரதேச சபையின் நிதிப் பங்களிப்புடன் ஆரம்பமான குறித்த மருத்துவ நிகழ்வில் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் சபைக்கு வருகை தந்த பொதுமக்களிற்கு வழங்கிவைக்கப்பட்டது.

தொடர்ந்து கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகையில் உள்ள உருத்திரபுரம், கந்தபுரம், இராமநாதபுரம், முரசுமோட்டை ஆகிய பிரதேசங்களில் உள்ள சுதேச மருத்துவ நிலையங்களில் பொது மக்களிற்கான குறித்த நோய் எதிர்ப்பு சக்தி குடிநீர் இலவசமாக வழங்கப்படவுள்ளது.



இதன்போது ஆயுள்வேத மருத்துவ திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பேயால, சுவதாரணி ஆகிய மருந்துகளும் குறித்த பிரதேசத்தில் உள்ள சுதேச மருத்துவ சிகிச்சை நிலையங்களில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும் என பிரதேச பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்துள்ளார். (5-100-312)

# இராசிபலன்

6.11.2020
ஐப்பசி 21, வெள்ளிக்கிழமை
சஷ்டி பின்னிரவு 3.38 மணிவரை
புனர்பூசம் பின்னிரவு 5.07 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சந்திராஷ்டமம்:- மூலம்

வளவன்


மேஷம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு, தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள்.


ரிஷபம்

புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.


மிதுனம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், போசன சுகமுண்டு.


கடகம்

அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் வகையில் இடம்பெறலாம், மனச் சஞ்சலங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.


சிம்மம்

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையலாம்.


கன்னி

திறமைகள் வெளிப்படும் நாள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்ளும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.


துலாம்

விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும்.


விருச்சிகம்

சிந்தித்து செயற்பட்டு சிறப்படைய வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.


தனுசு

பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், வருமானம் திருப்தி தரும்.


மகரம்

கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொழில் வளர்ச்சியில் தொல்லை தந்தவர்கள் விலகுவர், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


கும்பம்

பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், பிறர் உதவியுண்டு.


மீனம்

வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

நட்பு ஒரு சுதந்திரப் பறவை. அது விரும்புகின்ற இடத்தில் கூடு கட்டும்.

# அரசியல் கைதிகள் தொடர்பில் அரசின் முடிவுதான் என்ன?

## - சுரேன் ராகவன் கேள்வி -

**(கொழும்பு) இலங்கையின் சிறைகளில் அரசியல் கைதிகளாக தற்போது உள்ளோர் எத்தனை பேரென்றும் அவர்கள் தொடர்பில் அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதென பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.**

இது தொடர்பான பூரண விளக்கத்தினை எதிர்வரும் சர்வதேச நீதி தினத்திற்கு (ஜூலை 17, 2021) முன்னதாக தெரிவிக்கும்படியும் தேவைப்பட்டால் பாராளுமன்ற விவாதமொன்றையும் இது தொடர்பில் ஒழுங்கு செய்யுமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

யுத்த காலத்தில் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளில் பலர் படிப்படியாக முன்னைய ஆட்சிக் காலங்களில் விடுவிக்கப்பட்டிருந்தாலும் தற்போது எஞ்சியிருப்பவர்களையும் சட்டத்தின் முன்னிறுத்தியோ அல்லது பொதுமன்னிப்பு அளித்தோ சமூகத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுப்பதற்கு தேவையான கோரிக்கையினை முன்வைக்க வேண்டிய பொறுப்பு பாராளுமன்ற உறுப்பினரான தனக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இது தொடர்பில் நல்லிணக்கமொன்றை ஏற்படுத்தும் நோக்கில் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய குழுவொன்றினை நியமித்து அக்குழுவினுடைய ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்றுக்கொண்டு இப்பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நீதி அமைச்சரை கேட்டுக் கொண்டுள்ளார். (ஜ-2)



# தனிமைப்படுத்தலுக்காக விவசாய பயிற்சி மையம்

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளை தனி மைப்படுத்துவதற்காக பலாங்கொடை ரஜவக்க பிரதேசததில் உள்ள சப்ரகமுவ மாகாண விவசாயப் பயிற்சி மையம் தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரிகள் சிலர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்களுடன் தொடர்பைப் பேணிய ஏனைய பொலிஸ் அதிகாரிகளையும் தனிமைப்படுத்துவதற்காக மேற்படி மையம் தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

## நாட்டு மக்களின் நலனுக்காக செயற்படுங்கள்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு பாண் மற்றும் வெதுப்பக உற்பத்தி உணவு விநியோகம் தொடர்பாக உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சகல இடங்களிலும் பொதுமக்களின் அன்றாட உணவாக வெதுப்பக உற்பத்திகளான பாண், பணிஸ், கேக் போன்றன பயன்படுத்தப்படுகின்றன.

பெரும்பாலும் அநேகமான குடும்பங்கள் காலை உணவாக பாண் வாங்கி உண்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

எனவே வெதுப்பக உரிமையாளர்களுக்கு சற்று சிரமம் இருக்கின்ற போதிலும் பொது மக்கள் நலனுக்காக சுகாதார நடைமுறைகள் தொடர்பில் அக்கறை செலுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## மூடல்

(கொழும்பு)

மத்திய தபால் பரிமாற்றகத்தின் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து கொழும்பில் உள்ள மத்திய தபால் பரிமாற்றத்தை தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுத்துள்ளதாக தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார். இதனையடுத்து கொழும்பு மத்திய அஞ்சல் பரித்தனை நிலையத்தை மீள் அறிவித்தல் வரை மூடுவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# 200 அடி ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்த 3 வயதுக் குழந்தை



( டில்லி )

மத்திய பிரதேசத்தில் ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்த 3 வயது குழந்தையை மீட்கும் பணி தொடர்ச்சியாக நேற்று வரை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.


மத்திய பிரதேச மாநிலம் நிவாரி மாவட்டம் பிருத்விப்பூர் பகுதியில் உள்ள சேதுபுராபரா பகுதியை சேர்ந்த ஹறி கிருஷ்ணன் என்பவரின் 3 வயது மகன் 200 அடி ஆழமான ஆழ்துளை கிணற்றில் விழுந்துள்ளார்.

பொலிஸாருக்கும், தீயணைப்பு வீரர்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்ட நிலையில், குறித்த குழந்தையை மீட்கும் நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மீட்புக்குழுவால் குழந்தையின் குரலை கேட்க முடிவதாக நிவாரி மாவட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

தண்ணீர் அந்த கிணற்றில் 100 அடிக்கு கீழ் உள்ளதாக கூறப்படுகிறது. குழந்தை எத்தனையாவது அடியில் சிக்கியுள்ளான் என்பது குறித்து தெளிவான தகவல்கள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் விராலிமலை பகுதியில் மூடப்படாத ஆழ்துளை கிணற்றில் குழந்தை சுஜித் தவறி விழுந்து உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



கொரோனா அதிகரித்து வரும் இந்த சூழ்நிலையில் நீராவி பிடிப்பது மிகவும் நல்லது என்ற விடயம் பலரால் பேசப்பட்டு வருகிறது. இந்தியாவில் பொது இடமொன்றில் ஆவி பிடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் புகைப்படம் சமூக வலைத்தயங்களில் வைரலாகி வருகிறது.

# அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ள சீனா

(பீஜிங்)

தாய்வானுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்தது தொடர்பாக கண்டனம் தெரிவித்துள்ள சீனா இந்த விவகாரத்தில் அமெரிக்காவுக்கு தகுந்த பதிலடி கொடுப்போம் என எச்சரித்துள்ளது.



தீவு நாடான தாய்வானை தங்கள் நாட்டின் ஒரு பகுதி என சீனா கூறி வருகிறது. இதனால் தாய்வானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை விற்பனை செய்வதை சீனா கடுமையாக எதிர்த்து வருகிறது.

ஆனால் சீனாவின் எதிர்ப்பையும் மீறி அமெரிக்கா தாய்வானுக்கு தொடர்ந்து ஆயுதங்களை விற்பனை செய்து வருகிறது.


அந்த வகையில் அண்மையில் 2.37 பில்லியன் டொலர் மதிப்புடைய 100 ஹார்பூன் ஏவுகணை அமைப்புகளை தாய்வானுக்கு விற்பனைக்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்தது.

அதன் தொடர்ச்சியாக தற்போது 600 மில்லியன் டொலர் மதிப்பில் ஆயுதங்களுடன் கூடிய ஆளில்லா விமானங்களை தாய்வானுக்கு வழங்க உள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள சீனா இந்த விவகாரத்தில் அமெரிக்காவுக்கு தகுந்த பதிலடி கொடுப்போம் என எச்சரித்துள்ளது. (நி)



# பாரிஸ் பருவநிலை ஒப்பந்தம் அதிகாரபூர்வமாக விலகியது அமெரிக்கா



(வோஷிங்டன்)

பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா அதிகாரபூர்வமாக விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புவி வெப்பமாதலைக் கட்டுப்படுத்துவதற்காக சர்வதேச நாடுகள் பாரிஸ்நகரில் மேற்கொண்ட பருவநிலை மாற்றத்திலிருந்து விலகும் முடிவை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த 2017 ஆம் ஆண்டு அறிவித்தார்.

அந்த ஒப்பந்தத்திலிருந்து விலக நினைக்கும் நாடுகள், அதற்காக 3 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்று அதில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.


அதன்படி, அமெரிக்காவின் காத்திருப்பு காலம் நேற்று முன்தினத்துடன் முடிவுக்கு வந்தது. இதையடுத்து, பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா அதிகாரபூர்வமாக விலகியுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் வகையில், புவியின் சராசரி வெப்பநிலையை 2 டிகிரி செல்சியஸிற்கு கீழே வைத்திருப்பதற்கான சர்வதேச ஒப்பந்தம், பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த 2016 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.

அதற்காக, தங்களது நாடுகளின் தொழிற்சாலைகள் வெளியிடும் கரியமிலவாயுவின் அளவை குறிப்பிட்ட அளவுக்குக் கட்டுப்படுத்த அந்த ஒப்பந்தத்தில் நாடுகள் ஒப்புக்கொண்டன.

மேலும் அந்த ஒப்பந்தத்தில், அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் கையெழுத்திட்டன. எனினும் இந்த ஒப்பந்தம் அமெரிக்கப் பொருளாதாரத்துக்கு இழப்பை ஏற்படுத்தும். அமெரிக்கர்களின் வேலைவாய்ப்பைப் பறிக்கும் எனவும் ட்ரம்ப் குற்றம் சாட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 123 காந்த மணிகளை உட்கொண்ட சிறுவன்



(பீஜிங்)

சீனாவில் ஒரு சிறுவன் 123 விளையாட்டு காந்த மணிகளை விழுங்கியதையடுத்து நான்கு மணி நேர அவசர அறுவைச் சிகிச்சை மூலம் வைத்தியர்கள் அதனை வெளியில் எடுத்துள்ளனர்.

தென்மேற்கு சீனாவில் உள்ள குய்ஷோவில் உள்ள வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஐந்து வயது சிறுவன் தனது 12 வயது சகோதரியுடன் தனியாக வீட்டில் இருந்தபோது தொலைக்காட்சியைப் பார்த்தபடி சுமார் 123 விளையாட்டு காந்த மணிகளை ஒன்றன் பின் ஒன்றாக விழுங்கியுள்ளான்.

எனினும் இது குறித்து அறியாத பெற்றோர் சிறுவன் ஒரு காந்த மணிகயை மட்டுமே சாப்பிட்டதாகக் கூறி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அதன்போது வைத்தியர்கள் மேற்கொண்ட எக்ஸ்ரேயில் சிறுவனின் வயிற்றில் சிக்கிய காந்த மணிகள் வெளிப்பட்டுள்ளன. இதனைப் பார்த்த வைத்தியர்கள் அதிர்ச்சியடைந்தனர். (நி)

# நாடெங்கும் 12 ஆயிரம் குடும்பங்களை உள்ளடக்கிய உணவு உற்பத்தி திட்டம்

## ஜனாதிபதி விசேட செயலணி ஏற்பாட்டில் ஆரம்பம்



ஜனாதிபதியின் விசேட செயலணியின் வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய மனைப் பொருளாதார உற்பத்திகளை நாடளாவிய ரீதியில் விருத்தி செய்யும் நோக்கில் பயிர்க் கன்றுகள் வழங்கும் நிகழ்வு மொனராகலையை மையமாகக் கொண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.



கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் விவசாயத் துறையை விருத்தி செய்வதற்கு தேவையான சகல உதவிகளையும் வழங்குவதுடன் மனைப் பொருளாதார உற்பத்தியை விருத்தி செய்வதன் மூலம் மக்கள் தமக்குத் தேவையான உணவு உற்பத்தியை மாத்திரமின்றி மேலதிக உண்வு உற்பத்திகளையும் மேற்கொள்ள முடியும்.

பொருளாதார துறையை விருத்தி செய்வதன் ஊடாக வறுமையை முடிவுக்குக் கொண்டு வர முடியும். இந்த நோக்கத்துடனேயே தேசிய மனைப் பொருளாதாரத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்குத் தேவையான பயிர்க்கன்றுகள், உர வகைகள் உள்ளிட்ட பொருட்களை அரசு வழங்கவுள்ளது. பல்வேறுபட்ட காலநிலை சுற்றுச் சூழலுக்கேற்ப நாற்றுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக சிறிய ஏற்றுமதிப் பயிர்களை கிளை ஒட்டு செய்து வழங்குதல். முதிரை போன்ற பலன் தரும் மரக்கன்றுகளை வழங்குவது போன்றனவும் இவ்வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

நாடளாவிய ரீதியில் 12 ஆயிரம் கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் 24 ஆயிரம் குடும்பங்களை இவ் வேலைத் திட்டத்தினுள் உள்ளீர்க்க பொருளாதார உற்பத்தியை மேற்கொள்வதற்கும் மேலாக மனைப் பொருளாதார செய்கையாளர்களை வலுவூட்டுவதே இவ்வேலைத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

மொனராகலையை மையமாகக் கொண்டு ஆரம்பமான இந்நிகழ்வின் போது இராஜாங்க அமைச்சர்களான செஹான் சேமசிங்க, ஷசீந்ர ராஜபக்ஷ, பேரகொட உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (ஜ)

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு தொற்று




(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் போக்குவரத்துப் பிரிவில் பணியாற்றும் ஊழியர்கள் நால்வருக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த பிரிவில் பணியாற்றும் சுமார் 35 ஊழியர்கள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-7)

## எண்மர் கைது

(கொழும்பு)

பொலிஸாரால் அமுல் படுத்தப்பட்டுள்ள தனிமைப் படுத்தல் ஊரடங்கு விதிகளை மீறி ஜா-எல சுதுவெல்ல பகுதியில் வீடொன்றில் மதுபான விருந்து உபசாரத்தில் கலந்து கொண்டு மது அருந்திய 8 பேர் அதிரடியாக கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

## 'இடுகம' இருப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

'இடுகம' எனப்படும் கொவிட் - 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தின் இருப்பு 169 கோடி 34 இலட்சத்து 75 ஆயிரத்து 780 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

ஜனாதிபதி செயலகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட மற்றும் நிறுவன ரீதியான அன்பளிப்புகளுடன் நிதியத்தின் வங்கிக் கணக்கில் இடப்பட்ட நேரடி வைப்புகளுடன் இந்த தொகை எட்டப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி ஊடகப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், செலான் வங்கியினால் 50 இலட்சம் ரூபாவும், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் மூலம் ஒரு கோடியே 51 இலட்சம் ரூபாவும், தனியார் நிறுவனமொன்றினால் 50 இலட்சம் ரூபாவும் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், 'இடுகம' எனப்படும் கொவிட் -19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்துக்கு பங்களிக்க விரும்புவோர், **www. itukama. lk** எனும் இணையத்தளத்தின் ஊடாக அல்லது கைத் தொலைபேசியினூடாக **#207#** எனும் இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்துவதன் ஊடாக தமது பங்களிப்பை வழங்க முடியும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (நி-7)

# நோயாளரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு ஊரடங்கு தடையல்ல - வைத்தியர் ஹேமந்த

(கொழும்பு)

சுகவீனமுற்ற எந்தவொரு நபரையும் வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதை தாமதப்படுத்த வேண்டாமென பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள், தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட பிரதேசங்கள் மற்றும் ஏனைய பிரதேசங்களில் வசிப்பவர்கள் நோய்வாய்ப்படும் போது 1990 எனும் துரித சேவையை பயன்படுத்தி எந்தவொரு நோயாளரையும் வைத்தியசால்லக்கு கொண்டு செல்வதில் எந்தவிதமான தடையும் இல்லை.

ஆனால் அவ்வாறு நோயாளர்களை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லாத சம்பவங்கள் இடம்பெறுமானால் முதலில் அவற்றை நாம் தவிர்க்க வேண்டும்.

எந்தவொரு சந்தர்ப்பத்தின் போதும் நோயாளிகளை வைத்தியசாலைகளில் அனுமதிப்பதற்கு தடை இல்லை. அவ்வாறு நோயாளிகளை ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் மீள அனுப்புவார்களானால் அது குறித்து முறைப்பாடு செய்யலாம்.

அது தொடர்பாக சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கும். இது தொடர்பில் வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை பிரதானிகள் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவான விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் சுகாதார அமைச்சை தொடர்புகொண்டு தெளிவுபடுத்திக்கொள்ள முடியும். உயிராபத்து ஏற்படும் நிலை ஏற்படுமாயின் எவ்வாறானதொரு வழியிலாவது அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு வைத்தியர்கள் என்ற வகையில் நாம் கடமைப்பட்டிருக்கின்றோம் என பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் மேலும் தெரிவித்தார். (நி-7)

# எதியோப்பிய தூதரகத்தின் அறிவிப்பு

(கொழும்பு)

எதியோப்பியாவின் டைக்ரே பிராந்தியத்தில் உள்ள இலங்கையர்கள் தூதரகத்தின் அவசர உதவிகளுக்கு அடிஸ் அபாபாவில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்தின் விசேட இலக்கங்களையோ அல்லது மின்னஞ்சலையோ தொடர்பு கொள்ளுமாறு தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

டைக்ரே பிராந்தியத்தை கட்டுப்படுத்தும் டைக்ரே மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிட எதியோப்பிய பிரதமர் அபி அகமது எடுத்த முடிவைத் தொடர்ந்து, அங்கு ஆறு மாதங்களுக்கு அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் இணையம், தொலைத்தொடர்புகள், தகவல் தொடர்புகள் மற்றும் டைக்ரே பிராந்தியத்துடனான போக்குவரத்து இணைப்புகள் தடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் டைக்ரே பிராந்தியத்தில் உள்ள அனைத்து இலங்கையர்களின் விபரங்களும் எதியோப்பியாவின் வெளியுறவு அமைச்சகத்துடன் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன.

அவர்கள் ஏதேனும் புதுப்பிப்புகளை செய்ய விரும்பினால் அடிஸ் அபாபாவில் உள்ள இலங்கை தூதரகத்துடன் பகிர்ந்து கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி தற்போது எதியோப்பியாவில் உள்ள டைக்ரே பிராந்தியத்தில் உள்ள இலங்கையின் குடும்ப உறுப்பினர்கள் எவரும் அடிஸ் அபாபாவில் உள்ள இலங்கை தூதரகத்தின் விசேட எண் + (251) 941567804) அல்லது மின்னஞ்சல் ஊடாக அல்லது மின்னஞ்சல் (**slemb. ethiopia @gmail.com**) மூலம் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# கடல் புறா

## புதிதாக வந்தவன்




பாலூர்ப் பெருந்துறையின் நில வழிகள் பலமாகக் காக்கப்பட்டிருந்தால் நீர்வழி ஒன்று மூலமே அநபாயச் சோழனும் அவன் நண்பர்களும் தப்ப முடியும் என்பதை எடுத்துச் சொன்னதன்றி, அவர்கள் தப்ப வேண்டிய முறையையும் நிர்ணயித்துவிட்டதாகக் கூறி அரபு நாட்டு அமீர், அவர்களைக் கோதாவரி ஆற்றங்கரைக் குடிசையிலிருந்து அழைத்துச் செல்லுமுன்பு முன்னேற்பாடுகளை மிகுந்த எச்சரிக்கையுடன் செய்து கொண்டான்.

“சரி புறப்படுவோம்” என்று அநபாயன் கட்டளையிட்ட பின்பும் உடனே அதற்கு உடன்படாத அமீர், “சற்றுத் தாமதிக்க வேண்டும்” என்று கூறிவிட்டுக் குடிசைக்கு வெளியே சென்று சில விநாடிகளில் மூன்று பெரும் கறுப்புக் கம்பளங்களுடன் திரும்பி வந்து, “இதை ஆளுக்கொன்று எடுத்துத் தலையை முக்காடிட்டுக் கூடியவரை உடம்பையும் மறைத்துக் கொள்ளுங்கள்” என்று கூறினான்.

அவன் சொன்னபடி அவர்கள் போர்த்திக் கொண்டதும் அநபாயனைப் பார்த்த அமீர், “அந்தப் பழைய நடை தங்களுக்கு ஏற்கனவே பழக்கமானது. நான் சொல்லித்தர வேண்டியதில்லை” என்று கூறிப் புன்முறுவல் செய்து, மற்ற இருவரையும் நோக்கி, இதோ பாருங்கள்! எனக்குப் பின்னால் நீங்களிருவரும் முதுகை வளைத்துத் தலைகுனிந்து இப்படி அடக்கமாக அரை ஓட்டமும் அரை நடையுமாக வர வேண்டும்” என்று சொல்லி அவர்கள் வரவேண்டிய முறையை விளக்க தன் பெரும் சரீரத்தை வளைத்துத் தலையைக் குனிந்து கால்களைக் குறுக்கிக் குடிசையில் அப்படியும் இப்படியும் இரண்டு மூன்று முறைகள் ஒடியும் காட்டினான்.

அத்தனை பெரிய சரீரத்தைத் தூக்கிக்கொண்டு அமீர் ஓடியதே பெரும் விந்தையாயிருந்தது கருணாகர பல்லவனுக்கு. அப்படியிருக்க அவன் தங்களையும் அப்படி ஓட வேண்டுமென்று வற்புறுத்தியது விந்தையின் எல்லையைத் தொடவே, கருணாகர பல்லவன் கேட்டான். “தங்கள் பின்னால் இப்படி ஓடுவதில் பயன் என்ன இருக்கிறது?” என்று.

அமீரின் கண்கள் மிகவும் விஷமத்துடன் கருணாகர பல்லவனை ஏறெடுத்து நோக்கியதன்றி உதடுகளும் விஷமத்துடனேயே சொற்களை உதிர்த்தன. “உயிர் காப்பாற்றப்படுவது போதிய பயன் அல்லவா?” என்று கேட்டான்.

அமீர் குடிசைக்கு வந்தது முதல் பேசிய பேச்சைக் கேட்டு வியப்பெய்தியிருந்த இளைய பல்லவனுக்கு அவன் கடைசியாகப் பேசிய பேச்சைக் கேட்டபோது வியப்புப் பன்மடங்கு அதிகமாயிற்று. காஞ்சனாதேவியின் காதல் வலையிலிருந்த சமயத்தில் சரேலெனக் கவனிக்கத் தவறிய பல விடயங்களை அவன் கண்களும் செவிகளும் அதனின்று விடுபட்டதும் ஊன்றிக் கவனிக்கவே செய்தன.

முதன் முதலாக இளைய பல்லவன் கவனித்தது அந்த அரபு நாட்டான் பேசிய தமிழ் மொழியின் தெளிவுதான்.

தமிழனாகப் பிறந்து தமிழ் நாட்டிலேயே வருடக்கணக்கில் வளர்ந்தவன் எத்தனை தூய்மையாகவும் சரளமாகவும் பேசுவானோ அத்தனை தூய்மையாகவும் சர்வ சகஜமாகவும் தமிழ் மொழியை சுளிவுகளைத் தெரிந்து விஷமத்தையும் கலந்து அவன் சொற்களை உதிர்ப்பதையும் கண்டு வியப்பெய்திய இளையபல்லவன், “நீங்கள் தமிழகத்தில் இருந்திருக்கிறீர்களா?” என்று ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தான்.

“இல்லை, இருந்ததில்லை, ஏன் கேட்கிறீர்கள்?” என்று ஆச்சரியத்துடன் வினவிய அமீர், அந்த ஆச்சரியம் கண்களிலும் மலர ஒருமுறை இளைய பல்லவனை ஏறெடுத்து நோக்கினான்.

இதற்குக் கருணாகர பல்லவன் பதில் சொல்லுமுன்பு இடையே புகுந்து அநபாயனே பதில் சொன்னான். “அமீர்! உன் தமிழின் தூய்மை கருணாகரனைப் பிரமிக்க வைத்திருக்கிறது. வேறொன்றுமில்லை” என்று.

அதுவரை கருணாகர பல்லவன் பெயரைக்கூடக் கேட்காத அமீர், “இவர் பெயர் கருணாகரரா? என்று வினவினான்.

“ஆம் அமீர்! இவர் எங்கள் நாட்டின் பெரும் அரச குலமொன்றில் பிறந்தவர்.”

கருணாகர பல்லவன் அரசகுலத்தைச் சேர்ந்தவன் என்பதைக் கேட்டதும், சீனத்துக் குல்லாயுடன் தலையை ஒருமுறை தாழ்த்தி வணங்கிய அமீர், “வணக்கம் அரசே” என்று மிகப் பணிவுடன் சொற்களை உதிர்த்தான்.

“இவர் அரசரல்ல அமீர்” என்று திருத்திய அநபாயன் மெள்ளப் புன்முறுவல் செய்தான்.

அமீர் முகத்தில் குழப்பம் விரிந்தது. “அப்படியானால் யாரிவர்?”

“எங்கள் நாட்டில் பல்லவ குலம் என்றோர் அரச குலம் இருக்கிறது.”

“உம்.”

“அந்தக் குலத்து அரசரின் இளையவர் இவர்.”

“இளவரசரா?”

“ஆமாம், அதுமட்டுமல்ல.”

இதைக் கேட்டதும் ஏதோ வினாவை வீசுவதற்கு அறிகுறியாக மேலே எழுந்தன அமீரின் புருவங்கள். கண்களும் அநபாயன் முகத்தை நோக்கி கேள்விக்குறியை வீசின. அவன் கண்களில் கண்ட கேள்விகளைப் புரிந்து கொண்ட அநபாயன் “அமீர்! கருணாகர பல்லவர் தமிழகத்தின் பெரும் படைத்தலைவர்களில் ஒருவர்.

போரைவிட இவர் விரும்புவது எதுவுமில்லை. அப்பேற்பட்டவர் சமாதானத் தூதராகப் பாலூர் வந்தார். இவர் வந்த வேளை கடைசியில் போர்தான் விளையும் போலிருக்கிறது” என்று சொல்லி இதழ்களின் புன்முறுவலொன்றைப் படரவிட்டதன்றி, “அமீர்! வந்தவுடன் இவர்களை உனக்கு நான் அறிமுகப்படுத்தி வைத்திருக்க வேண்டும் ஆனால் குடிசைக்குள் நுழைந்தபோது நிலைமை வேறு விதமாயிருந்ததால் அந்தப் பணியைச் செய்ய முடியவில்லை.

இப்பொழுது தெரிந்துகொள். கருணாகர பல்லவர் தமிழகத்தில் இணையற்ற படைத்தலைவர் மட்டுமல்ல என் உயிர் நண்பருங்கூட. அதோ நிற்கும் அந்த எழிலரசி கடாரத்தின் இளவரசி உன்னிடம் ஒப்படைத்திருக்கிறேனே ஒருவர், அவருடைய மகள்” என்று தெளிவாக அறிமுகப்படுத்தவும் செய்தான்.

அநபாயன் இப்படி விளக்கிச் சொல்லியதால் ஓரளவு தெளிவடைந்த அமீர், அந்த இருவருக்கும் மீண்டும் தலைதாழ்த்தி, “அப்படியா! மிக்க மகிழ்ச்சி” என்று கூறியதோடு நில்லாமல், “கடாரத்து இளவரசி முன்பே தமிழ்நாடு வந்திருக்கிறார்களா?” என்றும் வினவினான்.

“இல்லை இல்லை இன்னும் தமிழ்நாட்டில் அடியெடுத்து வைக்கவில்லை. இனிமேல்தான் போக வேண்டும், அதுவும் என் தயவால்” என்றான் அநபாயன்.”

“தயவு என்று தாங்கள் சொல்வது தவறு. அடிமையைக்கட்டளையிடுவதுதான் முறை” என்று பணிவுடன் சொன்ன அமீர், “நான் தவறாக நினைத்துவிட்டேன் அநபாயரே! இவர்களுக்கு நீண்டநாள் பரிச்சயமிருக்க வேண்டுமென்று நினைத்தேன்.

அதனால்தான் இளவரசி முன்பே தமிழகம் வந்திருக்கிறார்களா என்று கேட்டேன்” என்று சமாதானம் கூறி விஷமப் புன்னகை செய்த அமீரைச் சுட்டுவிடுவன போல் நோக்கின கருணாகர பல்லவனின் ஈட்டி விழிகள்.

அவன் சொற்களைக் கேட்ட காஞ்சனாதேவியின் அஞ்சன விழிகள் நிலத்தை நோக்கின. அந்த நிலையை நீண்ட நேரம் நிலைக்க விடுவதால் ஏற்படக்கூடிய சங்கடத்தைப் புரிந்து கொண்ட அநபாயன் அமீரைச் சரேலென மறித்து, “அமீ காஞ்சனாதேவியால் கருணாகரர் கலிங்கத்தின் காவலரிடமிருந்து காக்கப்பட்டார். ஆகையால் நன்றியின் விளைவாக இருவருக்கும் நட்பு புலப்பட்டது.

(தொடரும்...)

# தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு தாரைவார்க்கும் செயற்பாடுகளை நிறுத்துங்கள்

## சிங்களே அமைப்பு வலியுறுத்து

**(கொழும்பு)**

**கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியில் தேசிய பாதுகாப்பு மற்றும் உபாய மார்க்க ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாட்டின் தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்குத் தாரைவார்த்துக்கொடுக்கும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் என்று "சிங்களே" அமைப்பின் பொதுச்செயலாளர் மடில்லே பன்னலோக தேரர் தெரிவித்தார்.**

"சிங்களே" அமைப்பினால் நேற்று முன்தினம் புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியிலும் கூட அரசாங்கம் மிகவும் முக்கியமானதொரு விடயம் தொடர்பில் தீர்மானமொன்றை மேற்கொண்டிருக்கிறது. நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் கொழும்புத்துறை முகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்குவதற்கு எதிரான பல்வேறு சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து நாமும் குரலெழுப்பி வந்தோம். இதற்கு எதிராக பல அமைப்புக்கள் அங்கு ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொண்டன.

எனினும் தற்போது கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக மேல் மாகாணம் முழுவதற்கும் தனிமைப்படுத்தல் பொலிஸ் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அங்கு போராட்டங்கள் எதனையும் முன்னெடுக்க முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு தருணத்தில் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக எமக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. நாட்டின் சுயாதீனத்துவத்தையும்இறையாண்மையையும் பிறிதொரு நாட்டிற்குத் தாரைவார்த்துக்கொடுக்கும் செயலாகவே நாம் இதனைக் கருதுகின்றோம்.

எனவே அரசாங்கத்தின் இந்தச் செயற்பாட்டை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளையே தற்போதைய அரசாங்கமும் மேற்கொள்கின்றது. இந்த அரசாங்கத்தை நாட்டுமக்கள் பெரிதும் நம்புகின்றார்கள்.

· ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இருக்கும்வரையில் எதற்காகவும் அஞ்சத்தேவையில்லை என்று கருதுகின்றார்கள்.

மக்கள் தம்மீது கொண்டிருக்கும் இந்த அபார நம்பிக்கை தொடர்பில் ஆட்சியாளர்கள் நன்கு அறிந்துகொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையைத் தவறான முறையில் பயன்படுத்தியே ஆட்சியாளர்கள் இத்தகைய காரியங்களைச் செய்கின்றார்கள்.

அதேபோன்று ஸ்பார்க் எயார் என்ற நிறுவனத்திற்கு மத்தள விமான நிலையத்தை நிர்வகிக்கும் பொறுப்பு கையளிக்கப்படவிருக்கிறது என்பது குறித்து நாம் அறிவோம். இவ்வாறு தேசிய பாதுகாப்பு அடிப்படையிலும் உபாய மார்க்க ரீதியிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகம் மற்றும் விமானநிலையம் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு வழங்குவதற்கு முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றோம் என்று அவர் தெரிவித்தார்.(நி-7)

# பாராளுமன்ற பேரவையின் முதலாவது கூட்டம்



(கொழும்பு)

இருபதாவது அரசியலமைப்பு திருத்தம் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட பாராளுமன்ற பேரவையின் முதலாவது கூட்டம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று முன்தினம் சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பிரதமரின் பிரதிநிதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதி பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிம், பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க மற்றும் பிரதிச் செயலாளர் நாயகமும் பணியாட்கள் தொகுதியின் பிரதானியுமான நீல் இத்தவெல ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதனையடுத்து, சபாநாயகரின் ஆலோசனைக்கமைய செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவால் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு அமைய பாராளுமன்ற பேரவையின் சட்டரீதியான கட்டமைப்பு மற்றும் அதன் நடைமுறைகள் என்பன விளக்கமளிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, அதன் உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடியதுடன் அது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இணக்கத்துக்கு வந்தனர். இதனையடுத்து, எதிர்வரும் நவம்பர் 10 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பேரவை மீண்டும் கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.(நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தாயின் கண்ணீர்

ஒரு வயதான அம்மா ஒரு நாள் எனக்குப் போன் செய்தார்.ஐயா...நான் இன்று ஒரு தகவல் தினமும் கேட்கின்றேன்.உங்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும் என்றார்.என்னங்க என்றேன்.எனக்கு சொந்தமான ஒரு நல்ல வீடு இருக்கின்றது.. வேண்டும் அளவுக்குப் பணமும் இருக்கின்றது... கண வரும் மிகவும் நல்லவர்.ரிடையராகி வீட்டிலே தான் இருக்கின்றார். பிள்ளை கள் எல்லாம் பெரிய பெரிய உத்தியோகத்திலே இருக்கின்றார்கள். அதிலே ஒரு வன் ஐ.ஏ.எஸ். பணம் எல்லாம் கூட நிறைய கொண்டு வந்து கொடுக்கின்றான்.

அப்படி இருந்தும் என் மனதிற்கு நிம்மதி இல்லை.. வாழ்க்கையில் ஒரு நிறைவு இல்லையே.. என்றார்கள்.. ஏன்? என்று கேட்டேன்.அதைத் தான் நான் உங்களைக் கேட்கின்றேன்.. ஏன் அப்படி? என்றார்கள்.எனக்கு ஒன்றும் புரியவில்லை...கொஞ்ச நேரம் குழம்பிப் போய்விட்டேன். இருந்தாலும் அதை அவர்களிடம் காட்டிக்கொள்ளாமல் கொஞ்சம் சாமர்த்தியமாக...ஏம்மா... உங்கள் மனதிலே நீங்கள்.. ஏதோ ஒன்று எதிர்பார்க்கின்றீர்கள்...அது நிறைவேறுவதில்லை அப்படித் தானே? என்றேன்..ஆமாம் என்றார்கள். அதன்பின்பு அவர்களிடம் கொஞ்சம் மனம் விட்டுப் பேசுகின்ற பொழுது,தானாக விடயம் வெளியே வந்தது.

அதாவது அவர்கள் பிள்ளைகள் பெரிய பெரிய உத்தியோகத்திலே இருக்கின்றதனால் அவசர அவசரமாக வந்துவிட்டு ஓடுகின்றார்களாம். ஆசையாக அம்மா என்றுகூப்பிட்டு கொண்டு உட்கார்ந்து கொஞ்ச நேரமாவது என்னிடம் பேசினால் என் மனது எவ்வளவு நன்றாக இருக்கும்? என்றார். இப்படி ஒரு ஏக்கம் அந்தத் தாயின் மனதிலே!இப்படி மகனுடைய அன்புக்காக மட்டுமே ஏங்கும் தாய்மார்கள் பல பேர் இருக்கின்றார்கள்.இந்த உலகத்திலே இதை நினைக்கும் போது ஒரு வெளிநாட்டு நாடோடிக் கதை ஞாபகத்திற்கு வருகின்றது.

அதாவது.. கடவுள் படைப்புத் தொழிலில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாராம்.மீன்களைப்படைத்தார்.பறவைகளைப் படைத்தார். விலங்குகளைப்படைத்தார்.அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை..பின்பு மனிதர்களைப் படைத்தார். அப்பொழுதும் அவருக்கு மனநிறைவு ஏற்படவில்லை.. கடைசிவரை தன்னுடைய சக்தி முழுவதையும் பயன்படுத்தி குறையே இல்லாத ஒரு படைப்பை உருவாக்கினார்.உன்னதமான ஒரு படைப்பு.அது தான் பெண். அதாவது தாய்.

இப்படி உருவாக்கி எல்லோரையும் இந்த உலகத்திலே விட்டு விட்டார். அதன்பின்பு கொஞ்ச காலம் கழித்து தன்னுடைய தேவியை அழைத்துக் கொண்டு இந்த பூலோகத்திற்கு வந்தார். தன்னுடைய குறையில்லாத படைப்பாகிய பெண்ணைப் பார்த்தார். ஏம்மா உனக்கு இன்னும் ஏதாவது குறை இருந்தால் சொல்லு அதையும் நிவர்த்தி செய்துவிடுகின்றேன் என்றார்.

அந்த அம்மா பார்த்தார்.சுவாமி எனக்கு நீங்கள் கொடுத்திருக்கிறது இரண்டு கை. என்னுடைய பிள்ளைகளுக்கு சேவை செய்ய இந்த இரண்டு கை போதாது.அதனால் இன்னும் ஒரு இரண்டு கை கொடுத்தால் பரவாயில்லை என்றார்.

கடவுள் பார்த்தார். அதனால் என்ன? அப்படியே செய்துவிடலாம்.இதோ அதற்கான வரம் கொடுத்துவிட்டேன் என்றார். அந்த அம்மாவுக்கு இப்பொழுது நான்கு கை ஆகிவிட்டது.

நான்கு கையாலேயும் குழந்தைகளுக்குச் சேவை செய்ய ஆரம்பித்து விட்டார்.கடவுள் திருப்தியாக திரும்பிப் போனார். அதன்பின்பு கொஞ்ச காலம் கழித்து மறுபடியும் திரும்பி வந்தார் தேவியோடு..பெண்ணைப் பார்த்தார். இப்பொழுது என்னம்மா சந்தோஷம் தானே என்றார். அதற்கு அந்த அம்மா... சந்தோசம் தான்..இருந்தாலும் இப்பொழுது எனக்கு இருக்கின்ற இரண்டு காலும் போதவில்லை..இன்னும் ஒரு இரண்டு இருந்தால் பரவாயில்லை. நிறைய ஓடி ஆடி பிள்ளைகளுக்காக வேலை செய்ய வேண்டி யிருக்கின்றது என்றார்கள்.சரி என்று சொல்லி, நான்கு கால் இருக்கின்ற மாதிரி செய்து விட்டார். செய்துவிட்டு திருப்தியாக திரும்பி போனார்.

மறுபடியும் கொஞ்ச நாள் கழித்து தேவி சொன்னார். கடவுளிடம் நீங்கள் என்ன தான் முயற்சி செய்தாலும் முழுமையான ஒரு படைப்பை உருவாக்க முடியாது என்று தான் நினைக்கின்றேன் என்றார்.அப்படியா சொல்கின்றாய்? வா அந்தப் பெண்ணைப் பார்த்துவிட்டு வருவோம்?என்று புறப்பட்டு இங்கே வந்தார்.இங்கே வந்து பார்த்தால்... நாலுகால்... நாலு கையோடு அந்தப் பெண் ஒரு சுவற்றிலே சாய்ந்து உட்கார்ந்து அழுதுகொண்டி ருந்தார்.இப்பொழுது தேவி அந்தப் பெண்ணைச் சுட்டிக் காட்டி கடவுளிடம் கேட்டார்.

ஏங்க நீங்கள்.. அந்தப் பெண்ணுக்கு கையை கொடுத்தீர்கள். காலைக் கொடுத்தீர்கள்...சரி... அந்த கண்ணீரையும் எதற்காகக் கொடுத்தீர்கள்? என்று கேட்டார். அதற்குக் கடவுள் சொன்னார்.கையைக் கொடுத்தது நான் தான்... காலைக் கொடுத்தது நான் தான்... ஆனால் அந்த கண்ணீரைக் கொடுத்தது நான் இல்லை..அதைக் கொடுத்தது அந்த அம்மாவோட பிள் ளைகள் .. என்றாராம்.இன்றைக்கும் அப்படித்தான்.பல பிள்ளைகள் அவர்கள் அம்மாவுக்கு கண்ணீரைத் தான் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அம்மாவை மதிக்கின்ற பிள்ளைகள் தான் இன்றைக்கு நல்லபடியாக இருக்கின்றார்கள். அதை ஞாபகத்திலே வைத்துக் கொள்ளுங்கள்.உதாரணம் வி.ஜி.பி. சகோதரர்கள் போன்றவர்கள்.

இந்தக் காலத்துப் பிள்ளைகள். ஒருவன் அவர்கள் அம்மாவிடம் நல்ல பிள்ளையாக நடந்து கொள்வான். மனைவியிடமும் நல்ல பிள்ளையாக நடந்து கொள்வான். மனைவியிடமும் நல்ல கணவனாக நடந்து கொள்வான். மிகவும் சாமர்த்தியம்.ஒருநாள் நான் அவனிடம் கேட்டேன்.ஏம்பா உங்கள் அம்மாவும் உன் மனைவியும் சண்டை போட்டுக் கொண்டால் நீ எந்தப் பக்கம் என்றேன். வீட்டுக்கு வெளிப்பக்கம் என்றான்.

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

11

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



## தற்போது வாழ்ந்து வரும் முன்னாள் குடியரசுத் தலைவர்கள்



ஜிம்மி கார்ட்டர்



பில் கிளின்டன்



ஜார்ஜ் வா புஷ்




பராக் ஒபாமா

### சுட்டுக் கொல்லப்பட்ட அமெரிக்க ஜனாதிபதிகள்

கடந்த 150 ஆண்டுகளில் ஆபிரகாம் லிங்கன், ஜேம்ஸ் ஆபிராம் கார்பீல்ட் , வில்லியம் மெக்கினாலே, ஜான் எப்.கென்னடி ஆகிய நான்கு அமெரிக்க ஜனாதிபதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதைவிட 11 முறை ஜனாதிபதிகளை கொல்ல நடத்தப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன.

### அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கொலை

1865 இல் ஆபிரகாம் லிங்கன் வாஷிங்டன் டி சியில் உள்ள வோர்டு நாடக அரங்கில் ஜான் வில்கிஸ் பூத் என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆபிரகாம் லிங்கன் ஐக்கிய அமெரிக்காவின் 16 ஆவது அமெரிக்க ஜனாதிபதி ஆவார். இவர் அடிமை முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனை ஒழிக்க முனைந்தவர்களில் ஒருவர். இவர் 1863 இல் அடிமைகள் விடுதலை பெற புகழ்பெற்ற விடுதலை எழுச்சி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து 1865 இல் ஐக்கிய அமெரிக்காவின் 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின் வழி அடிமை முறையை ஒழித்தார். இவர் மீது 1864 இலும் கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.



ஆபிரகாம் லிங்கன்


### அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் ஆபிராம் கார்பீல்ட் கொலை



ஜேம்ஸ் கார்பீல்ட்

ஜேம்ஸ் ஆபிராம் கார்பீல்ட் அமெரிக்காவின் 20 ஆவது ஜனாதிபதியாக இருந்தார். 1881 ஜுலையில், ஜேம்ஸ் ஆபிராம் கார்பீல்ட் வாஷிங்டன் டி.சி.யில் உள்ள பால்டிமோர் மற்றும் பொடோமேக் ரயில் நிலையத்தில் ஒரு மனநிலை பாதிக்கப்பட்ட நபரான சார்லஸ் ஜே. கைட்டோவால் சுடப்பட்டார். இந்த காயம் கார்பீல்டிற்கு உடனடியாக ஆபத்தானதாக இருக்கவில்லை. ஆனால் அவர் செப்டெம்பர், 1881 அன்று தனது மருத்துவர்களால் ஏற்பட்ட தொற்று நோய்களால் இறந்தார். ஜுன் 1882 இல் கார்பீல்ட் கொலை செய்யப்பட்டதற்காக கைட்டாவ் தூக்கிலிடப்பட்டார்.

### அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் மெக்கினாலே கொலை



வில்லியம் மெக்கினாலே

1901 இல் அமெரிக்காவின் 25 ஆவது ஜனாதிபதியாக பதவி வகித்த வில்லியம் மெக்கினாலியை லியோன் சோல்கோஸ் என்ற வேலையற்ற டெட்ராய்ட் ஆலைத் தொழிலாளி சுட்டுக் கொன்றான். மெக்கின்லி நியூஜோர்க்கில் பான்-அமெரிக்கன் கண்காட்சியில், வரிசையில் நின்று கொண்டிருக்கும் போதே சுடப்பட்டார். "மக்களின் எதிரி" என்பதால் ஜனாதிபதியைக் கொன்றதாக சோல்கோஸ் கூறினான். ஒக்டோபர் 1901 இல் சோல்கோஸ் தூக்கிலிடப்பட்டான்.

### அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப்.கென்னடி கொலை



ஜான் கென்னடி

அமெரிக்காவின் 35 ஈவது ஜனாதிபதியாக பதவி வகித்த ஜோன் எப்.கென்னடி, 1963 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி டல்லாஸ் நகரில் ஒரு திறந்த காரில் சென்று கொண்டிருந்த போது லீ ஹார்வி ஆஸ்வால்டு என்ற முன்னாள் இராணுவ வீரனால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய படுகொலை குறித்து பல்வேறு கருத்துகள், அதன் பின்னணி போன்றவை குறித்த சந்தேகங்கள் கடந்த 55 ஆண்டுகளுக்கும் மேலாக எழுப்பப்பட்டு வருகிறது.

ஜோன் எப்.கென்னடி கொலை தொடர்பான அலுவல் ரீதியான கோப்புகள் பலவற்றை அமெரிக்க அரசாங்கம் வெளியிட்டிருந்தாலும் சிலவற்றை இரகசியமாக பாதுகாத்து வருகிறது. ஜோன் கென்னடி கொலை தொடர்பான கோப்புகள் அனைத்தையும் வெளியிட வேண்டும் என 1992 இல் சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டப்படி 90 சதவீத ஆவணங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

**கடந்த 150 ஆண்டுகளில் ஆபிரகாம் லிங்கன், ஜேம்ஸ் ஆபிராம் கார்பீல்ட், வில்லியம் மெக்கினாலே, ஜான் எப்.கென்னடி ஆகிய நான்கு அமெரிக்க ஜனாதிபதிகள் சுட்டுக் கொல் லப்பட்டுள்ளனர். இதைவிட 11 முறை பல அமெரிக்க ஜனாதிபதிகளை கொல்ல நடத்தப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன.**

### தோல்வியில் முடிந்த கொலை முயற்சிகள்

### ஜனாதிபதி ஜெரால்ட் போர்ட் கொலை முயற்சிகள்



ஜெரால்ட் போர்ட்

1975 ஆம் ஆண்டு செப்டெம்பர் 22 இல் சான்பிரான்சிக்கோவில் ஜனாதிபதி ஜெரால்ட் போர்டை சாரா ஜேன் மூர் என்ற இடதுசாரி சார்புடைய பெண் சுட்டுக் கொல்ல முயன்றார். ஆனால் குறி தவறியதால் அந்த முயற்சி தோல்வியடைந்தது. இதற்கு முன் 1975 ஆம் ஆண்டு செப்டெம்பர் 5 இல் கலிபோர்னியா மாநில தலைநகரில் ஒரு கூட்டத்திற்கு செல்லும் வழியில், ஜனாதிபதி ஜெரால்ட் போர்ட் 26 வயதான லினெட் பிரோம் என்பவரால் தாக்கப்பட்டார். அந்தக் கொலை முயற்சியும் தோல்வியடைந்தது.

(தொடரும்...)

## பேருந்து கட்டணங்களில் தற்காலிகமாக திருத்தம் வேண்டும்

(கொழும்பு)


கொரோனா வைரஸ் தொற்றைக் கருத்தில் கொண்டு பேருந்து கட்டணங்களில் தற்காலிக திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ்தொற்று ஒழிக்கப்படும் வரையிலும் சாதாரண சேவைகளில் ஈடுபடும் பேருந்துகளின் கட்டணம் ஒன்றரை சதவீதத்திலும் ஆகக் குறைந்த கட்டணத்தை 20 ரூபாயாகவும் தற்காலிகமாக பேருந்து கட்டணங்களைத் திருத்தமாறு கோரியுள்ள அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன அவை மிக விரைவாக இடம் பெறவேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

பேருந்து கட்டணத் திருத்தங்கள், கொரோனா வைரஸ் காலப்பகுதியில்பேருந்து தொழில் துறையில்மேற்கொள்ள வேண்டிய மாற்றம் உள்ளிட்ட யோசனைகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

அதேபோல பயணியொருவருக்கு ஓர் ஆசனத்தை ஒதுக்குவது எனும் சுகாதார வேலைத் திட்டமும் அந்த யோசனையில் முன்வைக்கப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேருந்தின் பின்கதவால் ஏறும் பயணிகள் முன்கதவின் ஊடாக இறங்கவேண்டும். பின் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் நடத்துநர் பேருந்திற்குள் அங்குமிங்கும் நடமாடமுடியாது. நடத்துநரும் சாரதியும் பயணிகளும் முகக் கவசத்தை அணிந்திருத்தல் கட்டாயமாகும். அத்துடன் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் யாவும் 'கிருமித்தொற்றொழிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-7)



## ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி

### கொடி மர தத்துவம்

கோவிலுக்கு வந்ததும் ராஜகோபுரத்தை தரிசனம் செய்துவிட்டு உள்ளே செல்ல வேண்டும் என்று பார்த்தோம். வாருங்கள் ஆலயத்துக்குள் செல்லலாம். கோவிலில் வாயில்படியை பெரும்பாலான பக்தர்கள் தொட்டுக் கும்பிடுவதை பார்த்து இருப்பீர்கள். வாயில் படியை ஏன் தொட்டுக் கும்பிட வேண்டும்.

இதில் அறிவியல் பூர்வமான ஒரு செயலை நம் முன்னோர்கள் வைத்து இருக்கிறார்கள். ஒரு பக்தன் கோவில் வாசல்படியை தொடக்குனியும்போது அது முதலில் அவனிடம் பணிவை ஏற்படுத்துகிறது. அடுத்து அது அவன் உடம்பில் உள்ள சூரிய நாடியை இயக்குகிறது.

படிக்கட்டை தொட்ட பிறகு வலது கை விரல்களை நம் நெற்றியில் உள்ள புருவ மத்தியில் உள்ள ஆக்ஞா சக்கரம் மீது வைத்து அழுத்த வேண்டும். இது நம்மிடம் உள்ள தீய சக்திகளை விரட்டும். அதோடு தெய்வ சந்நிதிகளில் இருந்து வரும் அருள் அதிர்வலைகளை மிக எளிதாக நமக்குள் கிரஹிக்க செய்யும்.

எனவே அடுத்த தடவை கோவிலுக்குச் செல்லும்போது படிகளை வலது கையால் தொட்டு உங்கள் புருவ மத்தியில் சற்று அழுத்தம் கொடுத்துப் பாருங்கள். அது உங்களைப் புது மனிதனாக்கி புத்துணர்ச்சியுடன் கோவிலுக்குள் செல்ல வைக்கும்.

சக்தி பிரவாகம் எடுத்துப்பொங்க ரஜோகுணம் மேலோங்க நாம் ஆலயத்துக்குள் செல்ல வாயில் படி வழிபாடு நமக்கு உதவுகிறது.

உள்ளமும் உடலும் சிலிர்க்க நாம் அடுத்த காலடி எடுத்து வைத்ததும் நம் கண்களுக்கு கொடி மரம் தென்படும். ஆலய கொடி மரத்துக்கும் மிகப்பெரிய தத்துவங்கள் உள்ளன.

தமிழ்நாட்டில் ஆலயங்களில் கொடி மரம் வைத்திருந்த பழக்கம் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்பே வழக்கத்தில் இருந்ததற்கு பல உதாரணங்கள் உள்ளன. கோவிலில் திருவிழா தொடங்கும் சமயத்தில் கொடி ஏற்றம் நடந்ததை சங்க இலக்கியமான பட்டினப்பாலையில் "மலர்மணி வாயில் பலர் தொழ கொடியும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காடுகளில் சில மரங்களில் கொடி சுற்றி படர்ந்து இருப்பதை பார்த்து இருப்பீர்கள். அதில் இருந்து தான் கொடி ஏற்றும் பழக்கத்தை நம் முன்னோர்கள் உருவாக்கியதாக கருதப்படுகிறது.

அது பல்வேறு நடைமுறைகளாக மாறி இன்று "துவஜஸ்தம்பம்" என்று அழைக்கும் நிலை வரை வந்துள்ளது. நம் உடம்பில் உள்ள முதுகெலும்பு போன்றது கொடி மரம் என்று ஆகமங்கள் சொல்கின்றன.

நம் முதுகுத் தண்டுவடத்தில் 32 எலும்பு வளையங்கள் உள்ளன. அது போலவே 32 வளையங்களுடன் கோவில் கொடி மரம் அமைக்கப்படுகிறது.

நம் முதுகுத் தண்டில் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்ஞை எனப்படும் ஆறு ஆதாரங்களும் இடை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்று நாடிகளும் அமைந்துள்ளன.

பொதுவாக இடை, பிங்கலை வழியாக செல்லும் பிராண வாயுவை சுழிமுனை எனும் நடு நாடியில் நிறுத்தி இறைவனை தியானிக்க வேண்டும் என்பார்கள். இதனால் மனம் ஒரு நிலைப்படும். இறைவன் வெளிப்படுவான். இந்த அடிப்படையில் தான் கொடி மரம் அமைக்கப்படுகிறது.

கொடி மரம் ராஜகோபுரத்தை விட அதிக உயரமாக இருக்காது. அதே சமயத்தில் கருவறை விமானத்துக்கு நிகரான உயரத்துடன் இருக்கும்.

அது போல கருவறையில் இருந்தும் ராஜகோபுரத்தில் இருந்தும் எவ்வளவு தூரத்தில் எவ்வளவு உயரத்தில் கொடி மரம் அமைக்க வேண்டும் என்பதற்கு விதிகள் உள்ளன. இது கோவிலுக்கு கோவில் மாறுபடும். (தொடரும்)

## செய்தித்துளிகள்

### ஊரடங்கை மீறிய குற்றச்சாட்டில் நேற்று மட்டும் 200 பேர் கைது

(கொழும்பு)

. தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்று வியாழக்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய பகுதிகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன்போது 18 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டு தொடர்பாக மொத்தமாக இரண்டாயிரத்து 393 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 356 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக மொத்தமாக 78 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-7)

### 222 பொலிஸாருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கையில் இதுவரையில் 222 பொலிஸ் அதிகாரிகள் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, அவர்களுடன் தொடர்புடைய சுமார் 1407 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (நி-7)

### 156 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்தனர்

(கொழும்பு)

தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 156 பேர் நேற்று தங்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அந்தவகையில் தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 63 ஆயிரத்து 439 பேர் இது வரையில் மொத்தமாக விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் நாட்டில் முப்படையினரால் பராமரிக்கப்பட்டு வரும் 33 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 2 ஆயிரத்து 601 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல்களில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | .140 | 140 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 90 | 200 |
| தக்காளி | 100 | 80 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 100 | 60 |
| கோவா | 60 | 80 | 100 | 120 |
| கரட் | 100 | 160 | 180 | 200 |
| பூசணி | 50 | 40 | 50 | 60 |
| புடோல் | 200 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 200-240-280 | 240 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 140-160 | 180 |
| பாகற்காய் | 180 | 240 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 | 100 |
| பயற்றங்காய் | 40 | 120 | 90 | 160 |
| லீக்ஸ் | 60 | 90 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 140 | 160 | 240 |
| போஞ்சி | 120 | 180 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 100 | 80 |
| கீரை – 1 பிடி | 40 | 35 | 30-40 | 50 |
| தேசிக்காய் | 120 | 200 | 200 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | — | 300 |
| வெங்காயப்பூ | 100 | — | — | 280 |
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | — | 120 |



# சிறுவர் அரங்கம்

## ஆசை

கங்கையில் ஒரு வியாபாரி குளித்துக் கொண்டிருந்தான். அதை எடுத்துக் கொண்டு கரையை நோக்கி நீந்தினான் அவன்.

அப்போது ஒரு நீர்ச் சுழலில் மாட்டிக் கொண்டான். தப்பிக்கக் கடும் முயற்சி செய்தான்.


ஒரு வழியாகப் போராடி உயிர் பிழைத்தான். ஆனால் அந்தக் கைத்தடி எங்கோ நழுவிப் போய் விட்டது.

கரைக்கு வந்த அவன் அழகான கைத்தடியை இழந்து விட்டேனே என்று கதறினான்.

அங்கு இருந்த ஒரு துறவி, "ஐயா, நீங்கள் குளிக்க வெறுங்கையுடன் வந்ததை பார்த்தேனே? இப்போது கைத்தடியை நழுவ விட்டதாகக் கூறுகிறீர்களே?" என்று கேட்டார். வியாபாரி நடந்ததைக் கூறினான்.

துறவி சொன்னார், "ஐயா, உங்களைப் பார்த்தால் எனக்கு சிரிப்பு வருகிறது. கங்கையில் கைத்தடி மிதந்து வந்தது. இப்போதும் அது மிதந்து கொண்டு போகிறது.

அப்படி இருக்கையில் அது உங்கள் கைத்தடி என்று எப்படிக் கூறுகிறீர்கள்? அந்தக் கைத்தடியை இரண்டு நிமிடங்கள் தங்கள் கையில் வைத்திருந்ததனால் அது உங்களுடையது என்று சொந்தம் கொண்டாட உரிமை பெற்று விட்டதா?




வாழ்க்கையில் எதுவும் நிச்சயமில்லை. பிறக்கும் போது யாரும் எதையும் கொண்டு வருவதில்லை.

இறக்கும் போதும் எதையும் கொண்டு போவதில்லை. ஆனால் வாழ்வில் பலவற்றை உரிமை கொண்டாடுகிறோம். நமது துன்பங்களுக்கெல்லாம் அது தான் காரணம்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## ஆசான் அரிஸ்ரோட்டில்




சாதனைகள் செய்தால் பரிசு கிடைப்பது தவிர்க்க முடியாத நிகழ்வு. கொடுத்த வாக்கின்படி பியூசிபேலஸ் குதிரையை அடக்கியதற்காக அலெக்சாண்டருக்கு அன்புப் பரிசாகக் கொடுத்தார் மன்னர் பிலிப்.

உன்னுடைய சாதனைக்கு அரசையே உன்னிடத்தில் ஒப்படைக்க வேண்டும். அதுவேகூட சிறிய பரிசுதான் இப்போதைக்கு குதிரை மட்டும்.

தந்தையின் அன்புப் பரிசான பியூசிபேலஸ் குதிரையை அன்போடு வாரி அணைத்துக் கொண்டான் அலெக்சாண்டர். சில நிமிடங்களுக்கு முன் பெரும் ஜனத்திரளையே மிரளவைத்த குதிரை செல்லம் கொஞ்சிக்கொண்டு அலெக்சாண்டரின் அருகில் நின்றிருந்தது.

அலெக்சாண்டர் குதிரையை அடக்கிய சம்பவத்தை அட்சரம் பிசகாமல் காட்சி வாரியாக லியோனிடஸிடம் விபரித்தார் மன்னர் பிலிப். பூரிப்பாக இருந்தது லியோனிடஸுக்கு. ஆனாலும் அவருடைய முகத்தில் இலேசான சோக ரேகைகள். பதறிய மன்னர் என்ன ஏது என்று விசாரித்தார்.

தனக்கிருக்கும் வேலை காரணமாகத் தொடர்ந்து இந்த வீரமகனுக்கு கல்விப் பயிற்சி அளிக்க முடியாத நிலைமை என்றும் அருள்கூர்ந்து தனக்கு விடை தருமாறும் வேண்டினார் லியோனிடஸ்.

வேறு வழியில்லை. சரியென்று தலையசைத்தார் மன்னர் பிலிப். அலெக்சாண்டரின் எதிர்காலம் மற்றும் கல்வி குறித்த தீவிர சிந்தனையில் ஆழ்ந்தார்.

அலெக்சாண்டருக்கு ஏராளமான திறமைகள் இருக்கின்றன. ஆசிரியர் இல்லை என்கிற காரணத்திற்காக அவனுடைய திறமைகள் ஒருங்கிணைக்கப்படாமல் வீணாகிவிடக் கூடாது என்பதில் தெளிவாக இருந்தார் அதற்கு ஒரே தேவை ஆசிரியர். அதுவும் சிறந்த ஆசிரியர்.

தகுதியான ஒருவரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கினார் பிலிப். அப்போது தான் அரிஸ்ரோட்டில் என்கிற மேதையைப் பற்றிச் சொன்னார்கள் அமைச்சர்கள். அவர் தற்போது எங்கிருக்கிறார்? என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை உடனடியாக அறிந்து தகவல் கொடுக்குமாறு வீரர்களுக்கு உத்தரவிட்டார் மன்னர் பிலிப்.

### யார் இந்த அரிஸ்ரோட்டில்?

வெறுமனே அரிஸ்ரோட்டிலை மட்டும் தெரிந்து கொள்ளாமல் அவருடைய ஞான குருவான பிளேட்டோவைப் பற்றியும் சிறிய அறிமுகம் இங்கே. கிரேக்க தேசத்தின முக்கியமான பகுதி எதென்ஸ் பாரம்பரியம் மிக்க நிலப்பகுதி. (தொடரும்)

வாயால் போதிப்பதைவிட உன் நடத்தையே சிறந்த போதனையாக அமையும்.

– கோல்ட் ஸ்மித்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆட்களைக் கொன்று கொரோனாவை ஒழிப்போம்

சில ஆண்டுகளுக்கு முன்னர் பொறியியல் பட்டப்படிப்பை தமிழில் கற்பிப்பது என்றவொரு தீர்மானத்தை தமிழக அரசு எடுத்திருந்தது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் கருத்துரைத்த துக்ளக் சோ அவர்கள்;

தமிழனைக் கொன்று தமிழை வளர்ப்போம் என்பதுதான் பொறியியல் துறையை தமிழில் படிப்பித்தல் என்ற தீர்மானமாகும் எனக் கூறியிருந்தார்.

துக்ளக் சோ கூறிய அந்தக் கருத்துத்தான் இப்போது ஞாபகத்துக்கு வருகிறது.

நாட்டை முடக்காமல் கொரோனாவைக் கட்டுப்படுத்துகின்ற அரசின் திட்டத்தைப் பார்க்கும்போது, ஆட்களைக் கொன்று கொரோனாவைக் கட்டுப்படுத்துவோம் என்பதுபோல இருக்கிறது.

ஆம், கொரோனாத் தொற்றின் பரவுகை என்பது அதிவேகமானது. கொரோனாத் தொற்று ஏற்பட்ட ஒருவர் அதனை அறியாத நிலையில், எங்கெல்லாம் செல்கிறாரோ அங்கெல்லாம் கொரோனா பரவுகின்ற சந்தர்ப்பம் உண்டு.

நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாவைக் கட்டுப்படுத்துவதாக இருந்தால், பகுதியளவிலேனும் மக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த வேண்டிய தேவை ஏற்படும்.

அதாவது மாகாணம் அல்லது மாவட்டம் என்ற எல்லை வகைமையிலேனும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதிப்பது அவசியமாகும்.

ஆனால் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவது நாட்டை முடக்குகின்ற செயல் எனக் கருதியோ என்னவோ போக்குவரத்து விடயத்தில் அரசாங்கம் இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றவில்லை.

குறிப்பாக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்துத் தடை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டபோதிலும் அது விடயத்தில் எந்தவித நடவடிக்கைகளும் இருப்பதாகத் தெரியவில்லை.

மாறாக சர்வசாதாரணமாக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

இஃது கொரோனா பரவுதலை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பம் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

தவிர, இன்னும் மூன்று ஆண்டுகளேனும் கொரோனாவுடன் வாழ வேண்டியுள்ளது என சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.

இன்னும் மூன்று ஆண்டுகள் கொரோனாவுடன் வாழப் பழகுதல் என்பது மூன்றாம் கட்ட விடயம்.

இப்போதைய உடனடி நடவடிக்கை இலங்கையில் விஸ்வரூபமெடுத்துள்ள கொரோனா இரண்டாவது அலையைத் தடுத்து நிறுத்தி மக்களைக் காப்பாற்றுவதாகும்.

இதைவிடுத்து இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு கொரோனாவுடன் வாழ வேண்டியுள்ளதென்பதற்காக இப்போதே கொரோனாப் பரவுகைக்கு இடம் விட்டுக் கொடுப்பதான செயற்பாடு கொரோனாத் தொற்றாளர்கள் இறந்தால் கொரோனாவும் இல்லாமல் போகும் என்ற தியறியை பின்பற்றுவது போன்றதாகும்.

இத்தகைய பொருத்தமற்ற செயற்பாடுகளைக் கைவிட்டு, உன்னதமான மனித உயிர்களைப் பாதுகாப்பதே அவசரமானதும் அவசியமானதுமான தேவையாகும்.

# அரசாங்கத்திற்கு முஜிபுர் எச்சரிக்கை

(கொழும்பு)

**வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்திற்கு கிடைத்த கோடிக்கணக்கான நிதிக்கு என்ன ஆயிற்று? உலக வங்கி யுனிசெப் ஊடாக இலங்கைக்கு 180 மில்லியன் ரூபாய் கடன் வழங்குவதாகக் கூறியும் அந்நிறுவனத்தின் கணக்காய்விற்கு அஞ்சியே அரசாங்கம் அதனை நிராகரித்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்திடம் முறையான திட்டங்கள் எதுவும் இல்லை. வைரஸ் பரவல் தொடர்பிலும், அதனை கட்டுப்படுத்துவது தொடர்பிலும் ஆளும் தரப்பினர் எவருமே பேசுவதில்லை.

வேறு நபர்களை கொண்டே மக்களுக்கு ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கான சட்ட விதிகளை உருவாக்குவது தொடர்பிலும் ஆரம்பத்தில் கவனம் செலுத்தவில்லை.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலம் பூர்த்தியாகும் நிலையில், சுகாதாரத் துறையை முன்னேற்றுவதற்காக என்ன செய்துள்ளனர்.

சுகாதார அமைச்சராக பவித்ரா வன்னியாராச்சி நியமிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகப் போகின்றது. எனினும் சுகாதார துறையின் வளர்ச்சிக்காக அவர் என்ன செய்துள்ளார்? இதுவரையில் அவசர சிகிச்சை பிரிவுக்காக கட்டில் ஒன்றையாவது பெற்றுக் கொண்டுள்ளாரா?

இதேவேளை, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் எந்தவொரு நோயாளரையும் வைத்தியசாலையில் ஏற்றுக் கொள்ளுமாறு அறிவித்தல் விடுத்துள்ள போதிலும், கொழும்புக்குள் இருக்கும் தனியார் வைத்தியசாலைகள் நோயாளர்களை பொறுப்பேற்பதை நிராகரிக்கின்றன.

அவ்வாறு நோயாளர் ஒருவரை பொறுப்பேற்பது என்றால் முதலில் பி.சி.ஆர் பரிசோதனைகளை செய்யுமாறும், வைத்தியசாலையின் பேரில் 15 இலட்சம் ரூபாய் பணத்தை வைப்பிலிடுமாறும் தெரிவிக்கின்றது. இந்நிலையில் தற்போது வைத்தியசாலைகளும் மோசடிகளில் ஈடுபட்டு வருவதாகவே எமக்கு தோன்றுகின்றது.

இதனால் மக்களே தொடர்ந்தும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அதனால், தொடர்ந்தும் மக்களது வாழ்க்கையுடன் விளையாடுவதை அரசாங்கம் நிறுத்திக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (ஐ-4)

# எண்மருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் 8 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் இதனைத் தெரிவித்ததோடு அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிய 75 பேர் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ-4)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

**"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்."**

**மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)**

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**உறக்கம் சகல கவலைகளையும் மறக்கச் செய்வது போல் இறைவனுடைய திருவடித் தியானம் சகல கவலைகளையும் துறக்கச் செய்கின்றது. பாராயணம், வழிபாடு, தரிசனை, ஜெயம், தியானம், சமாதி இவைகளைப் படிமுறையாகப் பெறுதல் வேண்டும். உருத்திராட்சம், துளசி மணி இவைகளை அணிவதால் உடல்நலம் உண்டாகும்.**

(தொடரும்)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பொறாமையை அல்லது பகைமையை வெல்வது எப்படி?

காலப்போக்கில் எல்லாமே அழிந்து போகப் போவதுதான் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுங்கள்.

நீங்கள் எதைப் பெற்றிருக்கிறீர்களோ அதற்காக உங்களைப் பார்த்துப் பொறாமைப்படுகிறவர்களை எல்லாம் எண்ணிப் பாருங்கள். அவர்கள் அது உங்களுக்கு ஆனந்தத்தை (மகிழ்வைத்) தருவதில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? என்று அவரைக் கேளுங்கள்.

**கரோலின்:** ஒருவேளை, "ஆம் நான் மகிழ்ச்சியாகவே இருக்கிறேன்" என்று அவர் சொன்னால் நிச்சயம் அவர் வாழுங்கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவராகத்தான் இருக்கவேண்டும்.

**ஆனந்தா:** பிறர் உங்கள் மீது பொறாமைப்பட்டால் என்ன செய்யலாம்?

மிக உயர்வாக அவர்களை புகழ்ந்து பேசுங்கள்

உங்கள் அன்பான செயல்களால் அவர்களுடன் ஒரு ஒருமித்த நிலையை உருவாக்குங்கள்.

(தொடரும்)

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### அழகன் முருகப்பெருமானின் ஆயுதங்கள்

**தோமரம் (உலக்கை)**

இந்த ஆயுதம் பகைவர்களைச் சாடப் பயன்படுவது. குமார தந்திரத்தில் குறிப்பிடப்பெறும் 'தாரகாரி' என்று வடிவத்தில் உலக்கையை ஒரு கரத்தில் பிடித்துள்ளார். (சூரபன்மனின் இளைய தம்பி தாரகாசுரனை வதைத்தவன் ஆதலால் முருகப் பெருமானுக்கு 'தாரகாரி' என்று பெயர்).

**கரும்புவில்**

இது கரும்பால் செய்யப் பெற்ற வில். இது சிறப்பாக மன்மதனுக்குரியது. பராசக்தி கையில் தரித்து உள்ள கரும்பானது குறிப்பிடத்தக்கது. யோகியாக இருக்கும் மற்றைய தெய்வங்களும் போகத்தை உண்டாக்க கரும்புவில் ஏந்தியிருப்பர். ஸ்ரீதத்வநிதியில் குறிப்பிடப்பெறும் 'சௌரபேய சுப்ரமண்ய'ரின் கரங்கள் ஒன்றில் கரும்புவில்லும் மற்றொன்றில் மலரம்பும் கொண்டதாகவும் காட்டுவர்.

**மலரம்பு (வல்லி)**

இதற்கு புஷ்ப பாணம் என்றும் பெயர், தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்று ஐந்து பூக்களால் ஆகிய பாணம். (இவற்றை மன்மதன் மக்களிடத்தில் காம நினைப்பூட்ட எய்வான்).

**மணி**

பரநாதத்தை எழுப்பி ஆணவ இருள் அகன்று ஆன்மாக்கள் உய்ய இறைவன் திருக்கரத்தில் வைத்துள்ளார். இதுவும் ஒரு ஞானப்படை.

"பாடின் படுமணி" இரட்ட ஒரு கை" என்கிறார் நக்கீரர். திருமுருகாற்றுப்படையில் சரவணபவன் திருவுருவத்தில் பன்னிரு கரங்களில் ஒன்றில் "மணி"யை ஏந்தியுள்ளார்.

(தொடரும்)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 15.11.2020-13.11.2021

# பத்தில் வந்தது குரு பகவான், பதவியில் மாற்றம் உருவாகும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**மேட இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 15.11.2020 அன்று 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கின்றார். அங்கு சுமார் ஓராண்டு காலம் வீற்றிருந்து, அதன் பார்வை பலனால் உங்களுக்கு நன்மைகளை வழங்குவார். இடையில் சில மாதங்கள் 11 ஆம் இடமான இலாப ஸ்தானத்திற்கும் செல்கின்றார். குரு வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். பொதுவாக '10 இல் குரு வந்தால் பதவியில் மாற்றம் வரும்' என்பார்கள். நீங்கள் உத்தியோகத்தில் இருப்பவர்களாக இருந்தாலும், தொழில் செய்பவராக இருந்தாலும் மாற்றங்கள் வரத்தான் செய்யும்.

சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலம் பெற்றிருப்பவர்களுக்கு, நல்ல மாற்றங்கள் வரலாம். விரும்பத்தகாத மாற்றங்கள் வருமேயானால், வியாழக்கிழமைதோறும் விரதமிருந்து குருவை வழிபடுவதன் மூலம் நன்மைகளை வரவழைத்துக் கொள்ளலாம்.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக, குரு பகவான் உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகின்றார். குருவின் பார்வை 2 ஆம் இடத்தில் பதிவதால் குடும்ப ஸ்தானம் பலப்படுகின்றது. குடும்பத்தில் கொடிகட்டிப் பறந்த பிரச்சினைகள் படிப்படியாக மாறும்.

சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால், பகையை வெல் லக்கூடிய ஆற்றல் உங்களுக்கு வந்து சேரும். எதிரிகள் உதிரிகளாவர்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

**உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரியன் சாரத்தில் குரு சஞ்சாரம் (15.11.2020 முதல் 04.01.2021 வரை)**

உங்கள் இராசிக்கு பஞ்சம ஸ்தானாதிபதியானவர், சூரியன். அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, பூர்வ புண்ணியத்தின் பயனாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய யோகங்கள் அனைத்தும் வந்து சேரும். பாகப் பிரிவினைகள் அனைத்தும் சுமுகமாக முடியும்.

**திருவோணம் நட்சத்திரக் காலில் சந்திரன் சாரத்தில் குரு சஞ்சாரம் (05.01.2021 முதல் 01.03.2021 வரை)**

சந்திரன், உங்கள் இராசிக்கு சுக ஸ்தானாதிபதியாவார். அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, மிகுந்த நன்மைகளைச் செய்வார். குறிப்பாக தாய்வழி ஆதரவு கிடைக்கும். பெற்றோர்கள் உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர்.

**அவிட்டம் நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (02.03.2021 முதல் 04.04.2021 வரை, மீண்டும் 14.09.2021 முதல் 13.11.2021 வரை)**

இக்காலத்தில் குரு பகவான், உங்கள் இராசிநாதன் செவ்வாய் சாரத்திலேயே சஞ்சரிப்பது யோகம்தான். 'குரு மங்கள யோகம்' அடிப்படையில் இல்லத்தில் மங்கல காரியங்கள் நிறைய நடைபெறும்.

பெற்றோர்களின் மணி விழா, முத்துவிழா, பவளவிழா, பெண் குழந்தைகளின் பூப்புனித நீராட்டு விழா, திருமண வைபவங்கள் அடுக் கடுக்காக நடைபெறும் வாய்ப்புண்டு.

சுபவிரயங்கள் அதிகரிக்கும் இந்த நேரத்தில், அதற்கேற்ப வருமானமும் வந்து கொண்டேயிருக்கும். செவ்வாய் உங்கள் இராசிநாதனாக மட்டுமல்லா மல் அஷ்டமாதிபதியாகவும் விளங்குபவர். எனவே இக் காலத்தில் இடமாற்றங்கள், வீடுமாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் கூட ஏற்படலாம்.

**அவிட்டம் மற்றும் சதயம் நட்சத்திரக்காலில் செவ்வாய் மற்றும் ராகு சாரத்தில் குரு**




**சஞ்சாரம் (05.04.2021 முதல் 13.09.2021 வரை)**

இக்காலத்தில் கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கின்றார். அப்பொழுது அவர் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே சகோதர ஒற்றுமை பலப்படும். விலகிச்சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்திணைவர். வழக்குகள் சாதகமாக அமையும். வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரும். அதுமட்டுமன்றி லாப குருவின் ஆதிக்கத்தால் கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். 'படித்தும் வேலை இல்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு வேலை கிடைக்கும். வாழ்க்கைத் துணைக்கும் படித்த படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கலாம்.

அல்லது சுயதொழில் தொடங்குவதில் ஆர்வம் காட்டலாம். எப்படி இருந்தாலும் இக்காலம் உங்களுக்கு ஒரு பொற்காலமாக அமையும். பூர்வீக சொத்துக்களால் இலாபம் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து நீங்கள் எதிர்பார்த்த நல்ல தகவலும் வரும் நேரமிது.

**குருவின் வக்கிர இயக்கம்**

16.06.2021 முதல் 13.10.2021 வரை குரு வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். கும்பம், மகரம் ஆகிய இர ண்டு இராசிகளிலும் வக்கிரம் பெறு கின்றார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. எனவே இக் காலத்தில் நிதானமும், பொறுமையும் அவசியம்.

எதிர்மறைச் சிந்தனைகளைத் தவிர்ப்பது நல்லது. நேர்மறைச் சொற்களையே அதிகம் உபயோகப்படுத்துங்கள். அலைச்சலை குறைத்துக் கொள்ளுங்கள். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவுகளை உட்கொள்ள வேண்டாம். பிடிவாத குணத்தை தளர்த்திக்கொள்ளுங்கள். கோபத் தைக் குறைத்துக்கொள்வதன் மூலம் முன்னேற்றத்தில் ஏற்பட்ட முட்டுக் கட்டைகள் அகலும்.

வருமானப் பற்றாக்குறை அதிகரிக்கும். சேமிப்புகள் கரையலாம். தொழிலில் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பணி மாற்றங்கள் திடீரென வரலாம். வழிபாட்டின் மூலம் நன்மைகள் ஓரளவு கிடைக்கும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜை அறையில் பஞ்சமுக விளக்கேற்றி கற்பக விநாயகர் படம் வைத்து, ஆனைமுகனுக்குரிய துதிப்பாடல்களைப் பாடி வழிபடுவது நல்லது. மேலும் வியாழக்கிழமை விரதமிருந்து குரு கவசம் பாடி குரு பகவானை வழிபடுவதன் மூலம் வளர்ச்சி அதிகரிக்கும். வருங்காலமும் நலமாகும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

மேட இராசியில் பிறந்த பெண்களுக்கு, இந்தக் குருப்பெயர்ச்சி தொழில் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யும். பணிபுரியும் பெண்களுக்கு நல்ல முன்னேற்றமும் கிடைக்கலாம். திசாபுத்தி பலம் பெற்றவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். தாய், தந்தையின் அன்பும், ஆதரவும் உண்டு. பிள்ளைகளின் கல்யாணக் கனவுகள் மட்டுமல்லாமல், மேற்படிப்பு சம்பந்தமாகவும் நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி தரும். வராஹி வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

(தொடரும்)

## சுவாசிப்பதற்கு...

ழுந்துள்ளார்.

இதில் சுழிபுரம் மத்தியில் வசிக்கும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் உயர் தரத்தில் உயிரியல் பிரிவில் கல்வி கற்கும் மணிவண்ணண் நிசாளினி (வயது-18) என்ற மாணவியே இவ்வாறு தவறான முடிவெடுத்து நேற்று முன்தினம் உயிரி ழுந்துள்ளார்.

மரண விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## விபரீத முடிவெடு...

முதியவரை சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதித்த போதிலும் சிகிச்சை பலனின்றி முதியவர் உயிரிழந் திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி - கல்வயல் பகுதியைச் சேர்ந்த 70 வயதான முதியவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பான மேலதிக விசா ரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,30)

## சுய தனிமைப்படு...

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதன் பின் னர் தனிமைப்படுத்தல் தொடர்பில் மிகவும் தீவிரமாக கண்காணிக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் அறிவுறுத்தல் வழுங்கியுள்ளார்.

நாடு முழுவதிலும் சுமார் 31 ஆயிரத்து 457 வீடுகளில் 84 ஆயிரம் பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட் டுள்ளனர்.

நேற்றைய தினம் ஜனாதிபதி செய லகத்தில் கோவிட் ஒழிப்பு தொடர்பில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் இந்த விட யங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

சமூகத்தில் நோய்த் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டால் தொற்றாளியுடன் தொடர்புடையவர்கள் மற்றும் அவர்கள் இருக்கும் பிரதேசம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென வலி யுறுத்தியுள்ளார்.

தேவை ஏற்பட்டால் அந்தப் பகுதிகளை யும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கு மாறு ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கி யுள்ளார்.

பி.சி.ஆர் பரிசோதனைகளை தொடர் ச்சியாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக் கப்பட வேண்டுமெனவும்கோரியுள்ளார் (ம-3)

## ரோலர் இயந்தி...

தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் வட மராட்சி முள்ளிப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் உயிரிழந்தவர் 62 வயதுடைய பலாங்கொடை பகுதியை சேர்ந்த எஸ்.பி. பிரேமரத்ன என பொலி ஸார் தெரிவித்தனர்.

புலோலி - கொடிகாமம் வீதி அகலிப்பு வேலைகள் தற்போது நடைபெற்று வரு கின்றன. இவ்வேலையின் அகலிப்பு பணி தற்போது முள்ளிப்பகுதியில் இடம்பெற்று வருகின்றது.

இவ்வேலையில் ஈடுபட்டிருந்தபோது பணியாளர் ஒருவர் மீது ரோலர் இயந்திரம் ஏறியதன் காரணமாக படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு பின்னர் யாழ் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,60)

## வீடுகளுக்குள்...

சங்கத்தின் வைத்திய நிபுணர் ஹரித்த அளுத்கே, வீட்டில் உயிரிழக்கும் பலருக்கு கொரோனா தொற்று உறுதியாகின்றது.

அவர்களுக்கு கொரோனா தொற்று சமூகத்திலிருந்தே பரவியிருக்கின்றது. இந்த நிலைமை மிக ஆபத்தானதும் பாரதுாரமானதுமான நிலைமையாகும். இது தொடர்பில் கவனம் செலுத்தாமல் இருக்க முடியாது எனவும்ஹரித்த அளுத்கே தெரிவித்திருக்கின்றார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகை யில், வீடுகளில் உயிரிழந்த பலருக்கு மரணத்தின் பின்னர் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. அவர் களுக்கு சமூகத்திலிருந்தே தொற்று பரவி யிருக்கின்றது.

இது ஆபத்தான மற்றும் பாரதுாரமான நிலையாகும். நாட்டில் 60 ஆயிரம் பேர் தனி மைப்படுத்தலில் உள்ளனர் என்றார். (ம-3)

## 5 பேர் உயிரிழப்பு...

அந்த வகையில்,

1. கொழும்பு 2 இல் வசிக்கும் 46 வய தான ஆண், நேற்று முன்தினம் விம்புர மருத்துவமனையில் கால மானார். கொரோனா தொற்று உறுதி யான நிலையில் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரி ழந்தார். அவர் நீண்ட காலமாக சிறு நீரக நோயாளியாக இருந்தார்.
2. வெல்லம்பிட்டியில் வசிக்கும் 68 வயதான பெண், மார்பு வலியால் கொழும்பு தேசிய மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று முன்தினம் காலமானார்.
3. 58 வயதான பெண், கொழும்பு 12இல் உள்ள வீட்டில் காலமானார். அதி கரித்த இதய பிரச்சினைகளுடன் நீண்டகாலமாக சிரமப்பட்டார்.
4. 73 வயதான பெண், கொழும்பு - 14 இல் வசிப்பவர். தனது வீட்டிலேயே காலமானார். அவருக்கு சுவாசப் பிரச்சினைகள் இருந்தன.
5. 74 வயதான ஆண், கொழும்பு - 15 இல் வசிப்பவர். வீட்டில் காலமானார். கோவிட் - 19 ஆல் அதிகரித்த இதய பிரச்சினைகள் இருந்தன.

ஆகிய 5 மரணங்கள் பதிவாகியுள் ளன. (ம-3)

## +383...

பட்டுள்ளதாக இராணுவ தளபதி லெப்டின ன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித் துள்ளார்.

இந்நிலையில் நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 12 ஆயி ரத்து 570ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## வெலிக்கடை...

ஒருவருமாக 7 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணை யாளர் துஷார உபுல் தெனிய தெரிவித்தார்.

இந்நிலையில் கைதிகள் அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வுள்ளனர். (ம-3)

## பொலிஸ் - இரா...

படுத்தல் மற்றும் கோவிட் - 19 சிகிச்சை நிலையத்தில் பாதுகாப்புக் கடமைக்கு அனுப்பப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் கள் இருவர், மதுபோதையில் இருந்தமை மற்றும் கடமையைச் செய்யத் தவறிய குற்றச்சாட்டில் சேவையிலிருந்து இடைநீக் கம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரு வரும் நேற்று முன்தினம் நள்ளிரவு அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த இரா ணுவச் சிப்பாய் களுடன் முரண் பட்டு கைகலப்பில் ஈடுபட்டனர் என் றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

குறித்த பொலி ஸார் இருவரும் மதுபோதையில் நள்ளிரவு 12 மணி யளவில் அங்கிரு ந்த இராணுவத்தி னருடன் முரண்பட் டுள்ளனர். அத னால் இராணுவச் சிப்பாய்கள் பொலி ஸாரைத் தாக்கிய தால் இரு தரப்புக் கும் கைகலப்பு ஏற் பட்டுள்ளது.

சம்பவத்தை யடுத்து பொலிஸ் உத்தியோகத்தர் கள் இருவரும்கோப் பாய் பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவரால் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல் லப்பட்டனர்.

இந்த நிலை யில் மதுபோதை யில் இருந்தமை மற்றும் கடமையைச் செய்யத் தவறிய குற் றச்சாட்டில் கோப்பாய் பொலிஸ் உத்தி யோகத்தர்கள் இருவரும் சேவையிலி ருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அதற்கான பணிப்புரையை யாழ்ப் பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வழங்கி யுள்ளார். (ம-3)

## ஒரே குடும்பத்தை...

கொழும்பு, பேலியகொட மீன் சந்தைக்குச் சென்று வந்த கரவெட்டி இராஜகிரா மத்தைச் சேர்ந்தவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறி யப்பட்டு சிகிச்சை பெற்று வருபவரின் உற வினர்கள் மூவருமே கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மூவரும் ஒரு வாரத்துக்கு மேலாக சுயதனிமைப்படுத்தலில் கண் காணிக்கப்பட்டவர்கள். (ம-3,18,60)

## அமெரிக்க ஜனா...

உள்ள 50 மாநிலங்களில் இதுவரையில் வெளியிடப்பட்டுள்ள 44 மாநிலங்களின் முடிவுகளின் அடிப்படையில் ஜோ பைடன் இதுவரையில் 264 ஆசனங்களைக் கைப்பற்றி முன்னிலையில் உள்ளார்.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், 214 ஆச னங்களை கைப்பற்றியுள்ளார்.

ஆறு மாநிலங்களின் முடிவுகள் இது வரையில் வெளியாகாமல் உள்ளன. (ம-3)

மெகா பவர்
திகதி 05/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0664
வெற்றி இலக்கங்கள்: H 16 05 10 22 34

மஹஜன சம்பத
திகதி 2020/11/05
சீட்டிழுப்பு இலக்கம் 4297
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்: M 7 7 3 1 2 6
தேசிய லொத்தர் சபை

கொவிசெத - உத்தியோகபூர்வ முடிவுகள் - NLB
சீட்டிழுப்பு திகதி 05-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2592
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்: A 04 46 53 66
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1628 திகதி 2020/11/05
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்: O 02 12 28 36
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி - ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1093
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.11.05
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 82,400,020/-
வெற்றி இலக்கங்கள்: 08 09 39 70 H
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2020.11.05
சீட்டிழுப்பு இல. : 3423
வர்ணம் : சிவப்பு
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,266,860.70
வெற்றி இலக்கங்கள்: 13 15 33 52 I
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 2066
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1267 - நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 05.11.2020 - தினம் வியாழன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: Z 24 33 34 48
52,455,259.20/=
SUPER 500: 5 6 9 4
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி
சுப்பர் ஜக்பொட் 4,463,174/=
திகதி : 05.11.2020
வெற்றி வாரம் : 2974
வர்ணம் : கபிலம்
வெற்றி இலக்கங்கள்: 14 21 29 44
இடபம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,146,980

சங்வர்தன வாசனாவ - அபிவிருத்தி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதி : 05-11-2020
சீட்டிழுப்பு இடம்பெறவிருந்த திகதி : 31-10-2020 (சனிக்கிழமை)
ஆங்கில எழுத்து C - வெற்றி இலக்கங்கள் 26 35 53 - விதி எண் 9
வெற்றி வாரம் : 380 - வர்ணம் : சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 1,172,200
சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதி : 05-11-2020 (வியாழக்கிழமை)
ஆங்கில எழுத்து J - வெற்றி இலக்கங்கள் 05 37 43 - விதி எண் 3
வெற்றி வாரம் : 381 - வர்ணம் : நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 1,365,100
அபிவிருத்தி லொத்தர் சபை
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,455,904
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
www.dlb.lk

# அத்தியாவசிய பொருட்களை எடுத்து செல்ல ஊரடங்கு அனுமதி தேவையில்லை

## ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

மாவட்டங்களுக்கு இடையில் காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை எடுத்துச் செல்லும் பாரவூர்திகளிற்கு ஊரடங்கு அனுமதி தேவையில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று (05) காலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கொரோனா கட்டுப்பாட்டு பணிக்குழுவின் கூட்டத்தில் ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

தோட்டங்கள் மற்றும் குடியிருப்புகள் குறித்து சிறப்பு கவனம் செலுத்த வேண்டிய அவசியம் குறித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொருளாதார மையங்களை மொத்த வர்த்தகத்திற்கு மட்டும்பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது. சுகாதார அறிவுறுத்தல்கள் மற்றும் தொடர்ச்சியான பி.சி.ஆர் சோதனைக்கு இணங்க வர்த்தகம் உரிய விடாமுயற்சியுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கூறினார்.

மாவட்டங்களுக்கு இடையில் காய்கறிகள் மற்றும் பழங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை எடுத்துச் செல்லும் பாரவூர்திகளுக்கு ஊரடங்கு உத்தரவு தேவையில்லை.

அத்துடன், கட்டுநாயக்க முதலீட்டு வலயத்தில் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

தனியார் மருத்துவமனைகளின் பங்களிப்புடன் சுகாதார அமைச்சு மற்றும் கடற்படையின் மேற்பார்வையில் வர்த்தக வலயத்தில் சீரற்ற மற்றும் தொடர்ச்சியான பி.சி.ஆர் சோதனைகளை நடத்தவும் ஜனாதிபதி அறிவுறுத்தினார். (ம-03)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
பிரான்ஸ் / ஜெர்மனி
நெதர்லாந்து / சுவிஸ்
1150 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம்
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-505)

# யாழ். பண்டத்தரிப்பில் சுகாதார பரிசோதகரை அச்சுறுத்தியவர் மறியலில்

(யாழ்ப்பாணம்)

பொதுச் சுகாதாரப் பரிசோதகரை தகாதவார்த்தையால் அச்சுறுத்திய நபர் ஒருவர் மல்லாகம் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி வெளிமாவட்டத்தில் இருந்து வந்ததாக வடலியடைப்பு பண்டத்தரிப்பு கலைவாணி வீதி பகுதியில் 27 வயதுடைய நபர் ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

முதலாம் திகதி குறித்த நபர் வெளியில் சென்றுள்ளார். குறித்த விடயம் தொடர்பில் தகவலறிந்த அப்பகுதி சுகாதார பரிசோதகர் குறித்த நபரை விசாரிக்க சென்றுள்ளார்.

அப்போது அந்த நபர் சுகாதாரப் பரிசோதகரை தகாத வார்த்தைகளால் பேசியதுடன் எச்சரிக்கையும் விடுத்துள்ளார். உடனடியாக சுகாதாரப் பரிசோதகர் இது தொடர்பில் இளவாலை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதனடிப்படையில் குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் நேற்று முன்தினம் (04) முற்படுத்தப்பட்டு விளக்கமறியிலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-03)

# சுகாதார அமைச்சருக்காகவே திமிங்கிலங்கள் கரைக்கு வந்தன

## நளின் கிண்டல்

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கடலில் பாயப் போகிறார் என்ற செய்தியை கேட்டு பயந்தே திமிங்கிலங்கள் பாணந்துறை கடலில் இருந்து வந்து கரையொதுங்கியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கிண்டலடித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது பேசிய அவர், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, தம்மை அர்ப்பணிப்பதை காட்டிலும் முதலில் தமது தொழிலை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும் என்றார். (ம-03)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம், ராச வீதியில்
1 3/4 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
( ராச வீதி சந்திக்கு அருகாமையில் )
தரகர் தேவையில்லை.
(4548)
077 805 1655

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம், ஊரெழு,
ஆனந்தகானம் பகுதியில் 44 பரப்புக்
காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
(4548)
076 640 0974, 077 894 9549

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
2021 A/L DAY CLASS
ZOOM CLASS
CHEMISTRY
2020 A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது.
திரு. K. சிவத்திரன்
யாழ். முன்னணி ஆசிரியர்
MON, TUE, WED, THU, FRI, SAT & SUN
5.30 - 7.00 AM
திரு. S.T. உமாசங்கர்
கொழும்பு முன்னணி ஆசிரியர்
MON, TUE, WED, THU & FRI
9.30 - 11.00 AM
(C-638)
ஆரம்பம் : 06.11.2020
நேரடி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரும்
நிகழ்நிலை (zoom) வகுப்புக்கள் தொடர்ந்து நடைபெறும்.
தொடர்பு : 076 569 3006

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம், பலாலி றோட்,
கோண்டாவிலில் 5 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
( கோண்டாவில் சந்திக்கு அருகாமை )
(4548)
074 075 4204, 077 505 8561

உடனடி வேலை வாய்ப்பு
• தட்டெழுத்தாளர்
• அலுவலக உதவியாளர்
• விற்பனை முகவர்கள்
A/L சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
உங்கள் சுயவிபரக் கோவையை
Viber Or WhatsApp இல் அனுப்பி வைக்கவும்
(C-639)
070 375 0002

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
அமெரிக்க அதிஸ்ட விசா
2022ல் நீங்களும் அமெரிக்காவில்...
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்
0768226244
55000 இலவச விசாக்கள்
கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
02 இன்னும் நாட்களே
நிறையப்பேர் சொல்றாங்க இது பொய் எண்டு. இல்லை இது உண்மைதான். எனக்கும் ஆரம்பத்தில் நம்பிக்கை இல்லை, ஆனால் எனது நண்பர் தான் கூட்டிக்கொண்டு வந்து V2 Travels மூலம் பல பேருக்கு கிடைத்துள்ளது எங்களுக்கும் கிடைக்கும் என நம்பிக்கையூட்டினார். அவ்வாறே நான் எதிர்பாராத அதிஸ்ட விசா எனக்கும் கிடைத்தது.
(C-505)



லங்காகுமார் நிரோசன்
அமெரிக்கா விசா வெற்றியாளர்
V2 Travels
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237
மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.